843

Regd. No. M. 2797.

(விலை அணா ஒன்று.)

# வர்த்தக ஊழியன்.

# VARTHAGA OOLIAN.

Trichinopoly. } Monthly Journal of Commerce, Trade and Industry. { August 1933

மலர் 2.] திருச்சினாப்பள்ளி ஆகஸ்டு-மீ 1933 [இதழ் 14.

சிறுமலை வாழைப்பழம்.

தேவைக்குத் தக்கபடி மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனைக்குத் தயாராய் இருக்கிறது.
விலை மிக்க சரசமாய் கிடைக்கும்.

S. K. சுலைமான்,
சிறுமலை வாழைப்பழ வியாபாரம்,
திண்டுக்கல்.

பிராஞ்ச்:—3-நீர் கேட் மார்க்கட், திருச்சி.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை.

| | |
|---|---|
| வர்த்தக ஊழியன் ஆண்டுவிழா ... ... | 31 |
| ரயில்வே ரேட்டுகள் ... ... | 39 |
| உலக பொருளாதார மகாநாடு ... ... | 40 |
| தபால் தந்தி கட்டணம் ... ... | 41 |
| வணிகர் தொழிலும் செட்டிநாட்டு குமாரராஜாவும் ... | 42 |
| சிறு மணித்திரள் ... ... | 43 |
| நாணய மாற்றம் ... ... ... | 43 |
| வர்த்தக குறி வழக்கு ... ... ... | 44 |
| ரயில்வே பகுதி ... ... | 44 |
| வர்த்தக துணுக்குகள் ... ... | 45 |
| ராஜம்—சமூக சீர்திருத்தக்கதை ... | 47 |
| S. I. Ry., Advisory Committee ... | 50 |
| Varthaga Oolian Anniversary. ... | 51 |
| Trade Secrets ... ... | 54 |
| பழிக்குப்பழி ... ... | 55 |

"VARTHAGA OOLIAN."

Annual Subscription.

Inland Rs. 1—0—0. Foreign Rs. 1—8—0.

Advertisement Tariff.

One inch Rs. 0—8—0. One Page Rs. 10—0—0

Per Insertion.

Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.

சுத்த சுதேசி! சுத்த சுதேசி!!

8-அவுன்ஸ் DOUBLE ELEPHANT 8-அவுன்ஸ்

கல்கத்தா ரிஜிஸ்டர் நே. 2916. சுத்தமானது விலையில் மலிவானது

எங்கள் இரட்டை யானைமார்க்கு சோப் மிருகக்கொழுப்பு சேராதது, வஸ்திரங்களைத்தோய்ப்பதற்கும், குளிப்பதற்கும், உபயோகப்படுத்துவதற்கு திறமைவாய்ந்தது. நமது தாய்நாட்டில் தயாரிக்கப்படும் எங்கள் இரட்டையானை சோப்புகளை ஒரு தவணையாவது வாங்கி உபயோகப்படுத்துங்கள். அதன் குணமும் பெருமையும் நன்கு தெரியும்.

N. B.—வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

அ. க. & சே. அப்துல் ரகிமான் ராவுத்தர்,
புரோப்ரைட்டர்ஸ்,
மாடர்ன் சோப் ஒர்க்ஸ், பெரிய கம்மாளத்தெரு,
திருச்சினாப்பள்ளி.

# S. RETHINAVELU CHETTY,

**SHROFFMERCHANT,**

**BIG BAZAAR STREET TRICHINOPOLY.**

All kinds of Jewels set with No. 1 Indian Chemical Diamond, the best in the Market, can be Supplied at cheap rates.

## சீ. ரெத்தினவேலுசெட்டி

ஷராப் வியாபாரம், பெரியகடைவீதி திருச்சி.

## நெ. 1 இந்தியன் கெமிகல் டைமண்டு

குணத்தில் சிறந்தது. விலையில் குறைந்தது. கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு எமது மேற்பார்வையில் தயார் செய்யப்பட்டது. நெ. 1 இந்தியன் கெமிக்கல் டைமண்டு கற்கள் உறுதியிலும் பிரகாசத்திலும் அசல் வைரங்களுக்கு ஒப்பாக விளங்குகின்றன. ஒரு முறை வரவழைத்துப்பார்த்தால் உண்மை விளங்கும். 1நெ. இந்தியன் கெமிகல் டைமண்டு கற்களைக்கொண்டு பவுனில் கட்டப்பட்ட பலவிதமான நகைகளும் அசல் 1 நெ. ரங்கூன் புது வைரங்கள் இமிடேஷன் புஷ்பராகம் தளுக்கு படிக்கம் இமிடேஷன் பட்டை சிகப்பு, பூரு குச்சை பிளேன் பட்டை சிகப்பு, நீலம் திரிகலர், பச்சை முதலிய கற்களும் வர்ணத்தகடுகள் முதலியவைகளும் சரக்கு சுத்தமாயும் விலை சரசமாயும் எம்மிடம் கிடைக்கும். மேற்கூறிய தினுசுகளில் 2-ம் நெ. கற்களும் கைவசமிருக்கின்றன.

வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து அனுப்பப்படும் விலை விபரங்களுக்கு எழுதுக.



இனாம்! இனாம்!!

# என் அனுபவசாஸ்திரீய

## தேகாப்பியாச முறை

இது எல்லோருக்கும் இனாமாக அளிக்கப்படும்.



இப்புத்தகத்தில் தேகாப்பியாச முறையைப்பற்றி நன்ருக விவரித்து எழுதப்பட்டிருக்கின்றது. இது தவிர என்னுடையதும் மற்றும் என்னுடைய சிஷ்யர்களுடையதுமான அநேக புகைப்படங்கள் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கின்றன. எவன் தன் தேகத்தை அபிவிருத்தி செய்து ஆரோக்கியமாக இருக்க விரும்புகிருனே அவன் இப்புத்தகத்தை வாசிக்க வேண்டும்.

தபால் சார்ஜுக்காக இரண்டு அணு இந்திய போஸ்டல் ஸ்டாம்பு அனுப்பவும்.

பிரபோசர்: எம். வி. கிருஷ்ணராவ்,

உதகமண்டலம், (நீலகிரி.)

23—7—33-ல் திருச்சிறாப்பள்ளி

# "வர்த்தக ஊழியன்" பத்திரிகையின்

முதலாவது ஆண்டு விழாவில் தலைமைவகித்த

KUMARARAJAH OF CHETTINAD.

OFFICE OF THE REGISTRAR OF
8 AUG 1933
MADRAS

சென்னை மேயரும், செட்டிநாட்டு குமாரராஜாவுமாகிய

உயர்திருவாளர்

## எம். எ. முத்தைய்ய செட்டியார்

அவர்கள் பி. எ., எம். எல். சி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 8 AUG 1933 MADRAS

## நமது பத்திரிகையின்

# முதலாவது ஆண்டு விழா.

"வர்த்தகஊழியன்" முதலாவதாண்டு விழா கொண்டாட்டம் ஜூலை-மீ 23௨ ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு மேல் திருச்சினுப்பள்ளி டவுன் ஹாலில் செட்டிநாட்டுக் குமார ராஜாவும், சென்னை மேயருமான உயர் திருவாளர் எம். எ. முத்தைய்ய செட்டியார் பி, எ., எம். எல். சி. அவர்கள் தலைமையின்கீழ் வெகு விமரிசையாக நடைபெற்றது. டவுன்ஹால் வெகு அழகாக சிங்காரிக்கப்பட்டிருந்தது. ராவ்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை, ஜில்லா போர்டு பிரசிடெண்டு, மீனும்பள்ளி ஜமீன்தார் திரு கே. சி. எம். வெங்கடாஜல ரெட்டியார், கான்பகதூர் பி. கலிபுல்லா எம். எல். ஸி., திரு. வி. எஸ். இப்ருகீம், மலைக்கோவில் டிரஸ்டி டி. வி. ஆறுமுகம் பிள்ளை, சென்னை Dr. சி. நடேச முதலியார், சென்னை வக்கீல் திரு எஸ். ஜி. ரங்கராமானுஜம், சென்னை திராவிடன் மாஜி பத்திராதிபர் திரு டி. வி. சுப்பிரமணியம், திருச்சி முனிசிபல் சேர்மென் திரு ரெத்னவேலு தேவர், ஸ்ரீரங்கம் முனிசிபல் வைஸ்-சேர்மன் திரு எ. மாணிக்கம் பிள்ளை, ஸ்ரீரங்கம் கோயில் டிரஸ்டிகள் ராவ்சாகிப் பி.எஸ். சிவஞான முதலியார், திரு. கே. சின்னசாமி உடையார், திருவானைக்காவல் டிரஸ்டி திரு கே. கந்தசாமி உடையார், சென்னை தென்னிந்திய வர்த்தக சங்கக் காரியதரிசி திரு கே. கே. சீனிவாஸன், ஸ்ரீரங்கம் வர்த்தகசங்க பிரசிடெண்டு திரு ஆர். வி. பழனிசாமிபிள்ளை, திருச்சி தமிழவியாபாரிகள் சங்கம் பிரசிடெண்டு திரு பெ. அந்தோணியா பிள்ளை, ஷை சங்கக் காரியதரிசி திரு அளகிரிசாமி நாயுடு முதலானவர்களும் மற்றும்பலபிரமுகர்களும்வர்த்தகர்களும் வந்திருந்தார்கள். கூட்டம் ஆரம்பிக்கு முன்புகைப்படம்பிடிக்கப்பட்டது. "வர்த்தக ஊழியன்" பத்திரிகாசிரியர் திரு டி. வி. கே. நாயுடுஅவர்களுக்கு திருச்சிராப்பள்ளி வர்த்தகர்களால் அன்புடன் கொடுத்த "நன்றிஅறிதல் பத்திரத்தை" திருச்சினுப்பள்ளி புகையிலை வியாபாரம் திரு கே. எ. பி. விஸ்வநாதம்அவர்களால் வாசித்துக்கொடுக்கப்பட்டது.

திரு டி.வி.கே. நாயுடு பத்திரத்திற்கு வந்தனமளித்து பத்திரிகையை அபிவிருத்திசெய்ய எல்லோரும் சந்தாதாரர்களாக சேரும்படிக்கும் தம்முடன் வர்த்தகர்கள் ஒத்துழைக்கும்படிக்கும் கேட்டுக்கொண்டார்.

பின்னர், திரு டி. வி. கே. நாயுடு வருட அறிக்கையை வாசித்தார்.

### தலைவர் பிரசங்கம்.

செட்டிநாட்டு குமார ராஜா கீழ்க்கண்டவிதமாக ஆண்டுவிழாவில் பேசினர்:—

**பெரியோர்களே!**

தமிழ்நாட்டின் வர்த்தகத்தைப் பெருக்கவும், வர்த்தகர்களுடைய நிலைமையை மேன்மை படுத்தவும் ஏற்படுத்தப்பட்டது உமது பத்திரிகை. அதனுடைய ஆண்டு விழாவிற்கு என்னைத் தலைமை வகிக்கும்படி அழைத்ததற்காக உங்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தை அளிக்கின்றேன். நானும் வர்த்தகர்களில் ஒருவனுய் இருப்பதுதான் இந்த நிலைமையை ஏற்றுக்கொள்வதற்கு எனக்கு யோக்கியதையைத் தந்தது.

தத்துவ ஞானத்திலும், இல்லற ஒழுக்கத்திலும், மதக்கோட்பாடுகளிலும், பாஷாபி விருத்தியிலும் பெயர் பெற்ற பிரநாடுகளோடு சமமாக ஒப்பிடக்கூடிய நமது இந்தியநாடு வர்த்தகத்தில் மட்டும் பின்னடைந்திருப்பது வருந்தத் தக்கதாகும். ஆயினும் நமது முன்னோர்கள், முக்கியமாய் தென்னிந்தியர்கள், வர்த்தகத்தில் ஊக்கமற்றவர்களாய் இருந்திருக்கவில்லை. கடல் கொள்ளப்பட்ட காவிரிப்பூம்பட்டினத்தில் சீனர், சிங்களர், யவனர், கிரேக்கர், ரோமானியர், பாரசீகர் முதலிய அயல்நாட்டுக் குடிகள் வர்த்தக சம்பந்தமாக வந்து வசித்திருந்தார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பே இந்திய வியாபாரம் தொடங்கி பிரபலித்தது. தென்னிந்திய தேக்குமரம் பாபிலோன் நகரத்திற்கு அனுப்பப்பட்டு அவ்வூர் கட்டடங்களில் காணப்பட்டது. தென்னிந்தியாவில் எடுக்கப்பட்ட முத்து, எகிப்து, கிரீஸ், ரோமாபுரி முதலிய இடங்களில் ஆவலுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தாமிர பரணி தீர்த்தத்தில் இருந்த கொற்கை அக்காலத்தில் முத்துவியாபாரத்தில் பேர் பெற்றிருந்தது. இந்திய நீலம் ஆப்பிரிக்காவில் தென்பட்டது. நமது யானைகள் பாரசீகம், கிரீஸ் முதலிய தூரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அவ்விடம் அவைகள் தங்கள் போர்த்திறங்களைக் காட்டிப் போர் செய்தன. அவைகளைப் பழக்குவதற்கு இந்திய யானைப் பாகர்கள் அவ்வூர்களுக்குச் சென்றிருந்தார்கள். எகிப்து தேசத்து 'மம்மிகள்' என்னும் தைலக்காப்பிட்ட உடல்கள், இந்திய மஸ்லின்கொண்டு சுற்றப்பட்டிருந்தன. சந்தனமும், மயிலிறகும் இவ்வூரிலிருந்தே சென்றன. தோகையென்பது பலஸ்தீனுவில் இன்னும் துக்கியமென வழங்குகிறதாம். இலவங்கம் ஏலம் முதலிய வாசனைத் திரவியங்களையும் மிளகையும் நம் நாட்டிலிருந்து பிறநாட்டார்கொண்டு சென்றுர்கள். நம்நாட்டில் தோன்றிய பௌத்த மதம் ஊரெங்கும்பரவப்பெற்றன. சீனர் தங்கள் பட்டுகளை இந்தியாவின் மூலமாய் ஆங்கில நாடுகளுக்கு அனுப்பினுர்கள். ஏற்றுமதி செய்வதற்குப்பல கப்பல்கள் துறைமுகப்பட்டணங்களில் காணப்பட்டன. திரைகடலோடியும் நம்மவர் திரவியம் தேடினர். வணிக மக்களே அக்காலத்தில் பெருங்குடிகளாய் விளங்கினுர்கள். எனது இனத்தாரும் காவிரிப்பூம் பட்டிணத்தில் வியாபாரத்தில் பிரபலம் பெற்று இருந்தார்கள். இந்தியா தேசம் செல்வம் மலிந்து பொலிந்தது. ஆங்கிலேயர்களும் The wealth of Ornuz and of Ind என்று இந்திய நாட்டின் செல்வத்தையும், வளமையையும் புகழ்ந்தார்கள். இவ்வளவு சீரும் சிறப்பும் பெற்ற நம் நாடு தற்காலம் வாடி மண்ணிற் படிந்து பைங்கூழ்போல் நிலைகுலைந்தலைவதற்குக் காரணம் என்ன? நமது மக்கள் வியாபாரத்தை ஒழித்து வேறு வகையில் தங்கள் கருத்துக்களைச் செலுத்த ஆரம்பித்ததுதான். நூலறிவும் ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியும் நமது சமூகத்திற்கு முக்கியமேயானுலும் அவை வர்த்தகத்திற்கு துணைகளாயும் அதை முற்போக்கடையச் செய்யும் கருவிகளாயும் உபயோகப்படவேண்டு

மேயொழிய, அவைதான் முதற் காரணமாகக் கொள்ளப்படக்கூடாது. அரசியற் சீர்திருத்தங்களிலே ஆழ்ந்து, அவை சம்பந்தமான பத்திரிகைகளிலே மூழ்கித்திளைக்கும் இந்தியரை, வர்த்தகத் துறையில் கவனத்தைச் செலுத்தத் தூண்டும்படி ஏற்பட்ட உமது பத்திரிகை, இந்தியருக்கு காலத்திற் செய்த நன்றியாகிறது. மேனாடுகளில் வர்த்தக சம்பந்தமான பத்திரிகைகள் பலஉண்டு. ஆனால் இந்நாட்டில் அவை மிகச் சில. அவைகள் இப்போது சிறிது சிறிதாய் அதிகப்பட்டு வருகின்றன. என்றாலும் அவைகளை ஏராளமாகப் பெருக்கி ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வர்த்தகப் பத்திரிகை உலாவும்படிச் செய்ய வேண்டும். இங்கிலாந்து அமெரிக்கா முதலிய தேசங்களின் வர்த்தகப் பெருமையைப் பற்றி பேசுவது மிகையாகும். ஆங்கிலேயர் கடை வியாபாரிகள் என்று மற்ற தேசத்தாரால் ஏளனம் செய்யப்பட்டபோதிலும், அதன் உதவியால்தான் கடை வியாபாரிகள் தங்கள் தேசத்தை தலைமைக்கு கொண்டுவந்துவிட்டார்கள். பல சீர்திருத்தங்கள் வரவிருக்கும் இச் சமயம் "வர்த்தக ஊழியன்" சிதறிக் கிடக்கும் நம்மவர் சிந்தையை வர்த்தகத்திற் செலுத்திவிடச் செய்யுமானால், அதுவே அது பிறந்ததன் பயனாகும். பல இடங்களிலும் பரவி வியாபாரத்திலும் மேம்பாடடைந்திருக்கும் எனது குலத்தார், இதுபோன்ற வர்த்தகப் பத்திரிகையின் சிறப்பை உணர்ந்து 'செட்டிநாடு' 'குமரன்' என்னும் பத்திரிகைகளை நடத்தி வருகிறார்கள். இதுவன்றி பர்மா நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் 'தனவணிகன்' என்னும் ஒரு பத்திரிகையைச் சில நாட்களாக ஸ்தாபித்து நடத்தி வருகிறது.

அரசாங்க உத்தியோகத்தில்நம்மவர்க்கிருந்த பிரம்மை குறைந்து வருகிறது. உயர்தரக் கல்வியில் இருந்த பற்றும் சற்றே அடங்கி வருகிறது. கைத்தொழிலிலும், அதுசம்பந்தமான நூலறிவிலும், நுழைய ஆரம்பித்திருக்கின்றனர். 'வர்த்தக ஊழியன்' உபயோகப்படும் காலம் இதுவே. நாணயமாற்றம், கப்பற் செய்தி, பாதுகாப்புவரி, சட்டசபைகளில் இவை விஷயமாய் பேசப்படும் பேச்சுக்கள், தேயிலை, பருத்தி முதலிய வஸ்துக்களைப்பற்றிய விருத்தாந்தங்கள், பாங்கித்தொழில், துணி விற்பனை, சாமான் ஏற்றுமதி இறக்குமதி விபரங்கள், சாகுபடி கணக்குகள் இவைகளைக் காட்டும் வியாபாரத் துணுக்குகள், புகைவண்டிக்காரருக்கும் வர்த்தகருக்கும் ஏற்படும் வழக்குகள் ஆகிய பல உபயோகமுள்ள விஷயங்கள் அடங்கிய உமது பத்திரிகையைக் கண்ணுற்று மிகவும் மகிழ்ச்சி யடைந்தேன் வர்த்தக விஷயமாய்ப் போட்டிப் பரிசு ஏற்படுத்தியதும் மெச்சத் தகுந்ததே திருச்சியில் வியாபாரச் சங்கம் ஒன்று இருக்கிறது. அதன் தீர்மானங்களையும், உள்ளூர் விலைவாசி முதலிய ஜாப்தாக்களையும் அவ்வப்போது விளம்பரப் படுத்தவேண்டியது அவசியம். வர்த்தக சீர்திருத்தத்தில் இப்பத்திரிகை செய்யக்கூடியது பலவுண்டு. அது எந்த வியாபாரத்திலும் காணப்படும் நாணயம் என்பதே. வர்த்தகர்கள் நாணயத்தை கைவிடலாகாது. மற்ற நாட்டாருக்கு நம்மிடத்தில் நம்பிக்கை உண்டாக வேண்டுமானால், அதனால் அவர்கள் கடனை ஏராளமாய்க் கொடுத்து நம்மை விருத்தி செய்யவிரும்பினால், நாம் நாணயத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். 'நாணயம் நனிபேண்' என்கிறதலைப்பை உமது பத்திரிகையின் கொள்கையாக பதிப்பித்துக்கொள்ளலும் தகும். வியாபாரம் கூட்டுறவாலும் ஒருவர் மற்றவரின்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையாலுமே வளரக்கூடியது. நம்பிக்கை குறைவு ஏற்பட்டால் வியாபாரமும் வளராது.

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு, காமுறுவர் கற்றறிந்தார்."

என்று எப்படிக் கல்வியைத் தாம் கற்கத் தன்னால் உலகமும் தெரிந்து இன்பமடைகிற தென்கிற எண்ணத்தால் அதை அறிஞர் விரும்புகிறார்களோ, அதே போல் தான் இலாபம் அடைவதோடு தன் மூலமாய்ப் பிறரும் பலன் அடைகிறார் என்னும் காரணத்தாலேயே வர்த்தகரும் வியாபாரத்தை விரும்ப வேண்டும். வருகின்ற இலாபத்தையெல்லாம் ஒருவனே அடையவேணுமென்கிறஎண்ணம் நம்மவருக்கு உதிக்குமானால் அது வியாபாரத்திற்கு ஊனமாகும். தனக்கு ஒரு பகுதியும் மற்றவர்களுக்கு ஒரு சிறிதும் என்கிற முறையில்தான் வெள்ளையர் தங்கள் வியாபாரத்தைப் பெருக்குகிறார்கள். மேனாடு போன்ற கூட்டுறவு வியாபாரம் நம் நாட்டில் செழித்து வளருவதில்லை. 'அண்டு கம்பெனி' என்னும் முடிவு கொண்ட வியாபாரக் கடைகளெல்லாம் பெயர் முறையாற் பன்மை முதலாளிகளைக் குறிக்குமே யன்றி நடைமுறையிற் பலர் சேர்ந்து வியாபாரம் செய்யும் கடைகளைக் குறிப்பவை யன்று. இரண்டொருவர் வியாபாரத்திற்கு ஆரம்பிக்கு முன்னரே, ஒருவர்மேலொருவர் சந்தேகங் கொண்டவராய், கூட்டாளிசெய்யும் வேலை ஒவ்வொன்றையும் ஐயத்துடன் நோக்கினால், கூட்டுறவு நின்று நிலைப்பதெப்படி? சில வியாபாரிகள் தாங்கள் தொன்றுதொட்டு செய்யும் வியாபாரம் பலனற்றதென எண்ணி வேறுவகை வியாபாரத்தில் கண்ணோட்டம் வைத்தால், அதில் உள்ள மர்மங்களை அறியும் வரையில் அவ்வகையான வியாபாரத்தில்தேர்ந்த ஒருவனைக் கூட்டாகச் சேர்த்துக்கொண்டு, அம் மர்மங்களைத் தெரிந்துகொண்டவுடனும், தன் மக்கள் சுற்றத்தார் அவைகளில் தேர்ச்சி பெற்றகணமும், அக்கூட்டாளிகளுடன் ஏதோ ஒரு வியாஜ்ஜியம் வைத்துச் சண்டையிட்டுப் பிரிந்துபோவதை நாம் கண்டிருக்கிறோம். சிறு வியாபாரத்திலேயே இவ்வகைக் கஷ்டம் என்றால் கோடிக்கணக்கில் ஆங்கிலேயர்,அமெரிக்கர் போன்று பொருளும் மனிதரும் சேரவைத்து வியாபாரம் செய்து முன்னேற்றம் அடைவதெப்படி? இவ்வித இடர்பாடுகளையெல்லாம் உமது பத்திரிகையின் மூலமாய் நீங்கள் எடுத்துக் காட்டி வியாபார உலகத்தைச் சீர்திருத்தம் செய்வது உமது கடன். உமது பத்திரிகையின் மூலமாய் பல சீர்திருத்தங்களைச் செய்யலாம். தினசரிப் பத்திரிகைகள் சமூக சீர்திருத்தத்திலும் அரசாங்க சீர்திருத்தத்திலும் உழைப்பதுபோல், உமது பத்திரிகை, வியாபார சீர்திருத்தத்தில் நுழைந்து அதைச் சாதிக்கலாம். இவ்விதமான பத்திரிகை தமிழ் நாட்டில் இதுவரை இல்லாதிருந்தது பெருங்குறையே. கல்லூரிகளும் சான்றோர் பலரும், வணிக மக்கள் கூட்டமும் புகழ்பெற்ற ஆலயமும்பெற்றுவிளக்கம் அடைந்திருக்கும். இப் பழம்பதியில் தென்னிந்திய வியாபாரத்தை நடத்துவிக்கும் சிறந்த பத்திரிகையாய் உமது பத்திரிகை விளங்கி நீடூழி நிலைத்து தழைக்கும்படி எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக."

காரைக்குடி "குமரன்" பத்திரிகையின் ஆசிரியர் திரு சொ. முருகப்பா பத்திரிகைத் தொழில் நடத்துவது மிக மிக கஷ்டமென்றும் திரு டி. வி. கே. நாயுடு அவர்கள் வர்த்தகர்களுக்காக உழைக்க முன்வந்ததை பாராட்டி வர்த்தகர்கள் 'வர்த்தகஊழியனுக்கு' போதிய ஆதரவளிக்க வேண்டுமென்று சொன்னார்.

திருச்சினாப்பள்ளி புகையிலை வர்த்தகம் திரு கே. எ. பி. விஸ்வநாதம் அவர்கள் வர்த்தகர்கள் அவசியம் பத்திரிகைகள் வாசிக்க வேண்டு மென்றும் அதிலும் வர்த்தக சம்மந்தமான பத்திரிகைகளை வாசிக்க வேண்டுமென்றும், வர்த்தகர்கள் நிறைந்திருக்கும் திருச்சினாப்பள்ளியில்வெளிவரும் 'வர்த்தக ஊழியனை' வர்த்தகர்கள் வாங்கி

வாசித்துப் பயனடைய வேண்டுமென்றும் "வர்த்தகஊழியனை" மேலான நிலைமைக்கு கொண்டுவர வர்த்தகர்களும் வர்த்தக சங்கத்தாரும் உழைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

'வர்த்தக ஊழியன்'மானேஜர் திரு டி. என் சுந்தரராஜலுநாயுடு அவர்களால் வந்தனோபசாரம் சொன்னபொழுது பின்வருமாறு பேசினர்:—

அன்பர்களே! நாம் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் நமது பத்திரிகையின் முதலாவது ஆண்டுவிழா இன்று சென்னை மேயரும் செட்டிநாட்டு குமாரராஜாவுமான உயர்திருவாளர் எம். எ. முத்தையய செட்டியார் பி. எ. எம். எல். சி. அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நமது அழைப்புக்கிணங்கி நமது பத்திரிகையின் முதலாவது ஆண்டு விழாவில் தலைமைவகித்து இங்கு விஜயம் செய்திருந்த வர்த்தகர்களுக்கு தானும் ஒரு வர்த்தகரென்ற முறையில் பல அரிய விஷயங்களை எடுத்துக்கூறி வர்த்தகர்களிடையே ஒரு புதிய உணர்ச்சியை உண்டுபண்ணி அதன்மூலம் 'வர்த்தக ஊழியன்' பத்திரிகையின் ஊழியத்தை ஒவ்வொரு வர்த்தகருடைய மனதிலும் படும்படியான சொற்பொழிவை ஆற்றி நமது எண்ணத்தை நிறைவேற்றி வைத்த குமாரராஜா முத்தையயசெட்டியாருக்கு நமது மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகின்றோம் மற்றும் நமது அழைப்புக் கடிதம் கண்டு தங்களது தவிர்க்க முடியாத பலஅலுவல்களையும், 'வர்த்தக ஊழியன்' மீது கொண்டுள்ள அன்பினுல் ஒதுக்கி வைத்துவிட்டு ஆண்டுவிழாவில் கலந்து 'வர்த்தக ஊழியன்'பத்திரிகைக்கு பெருமையளித்த காரைக்குடி 'குமரன்' பத்திரிகையின் ஆசிரியர் திரு சொ. முருகப்பா அவர்களுக்கும், சென்னை, தென்னிந்திய வர்த்தக சங்கத்தின் காரியதரிசி திரு கே. கே. சீனிவாசன் அவர்களுக்கும், நமது நகரிலுள்ள பல பெரியார்களுக்கும் நமது நன்றியறிதல் உரியதாகுக. 'வர்த்தக ஊழியன்' பத்திரிகை பிறந்து ஒரு ஆண்டுகளே யாயினும், நமது நாட்டிலுள்ள, பெரும்பகுதியினர்களாகிய வர்த்தகர்களிடையே சென்று அவர்களின் உற்ற தோழனாக விளங்கி வருவதற்கு ஆண்டு விழாவில் நிகழ்ந்த நிகழ்ச்சிப்பெருக்குகளும் இன்று விஜயம் செய்து ஆரம்பமுதல் கூட்டம் முடியும்வரை பொறுமையோடு வீற்றிருந்த பெருங்கூட்டமே தக்கசான்றாகும். நிற்க, திருச்சிஜில்லா தமிழவியாபாரிகள் சங்க அங்கத்தினர்கள் நமது பத்திரிகையின் நலங்கருதி ஆண்டுவிழாவில்கலந்துகொண்டு, சிறப்பாய் நடத்திக்கொடுத்ததற்காக அவர்களுக்கு நமது நன்றியறிதலை செலுத்துகின்றோம்.

பின்னர், சந்தனம், கற்கண்டு, தாம்பூலம் வந்திருந்த எல்லோருக்கும் கொடுக்கப்பட்டபின் கூட்டம் கலைந்தது.

## வர்த்தகர்களின் தேநீர் விருந்து.

'வர்த்தக ஊழியன்'வருடப்பூர்த்திக்கு தலைமை வகிக்க வந்த குமாரராஜா திரு முத்தையய செட்டியார் அவர்களுக்கு திருச்சிஜில்லா தமிழவியாபாரிகள் சங்கத்தார் பழக்கடை தண்ணீர்ப் பந்தல் கார்னேஷன் தோட்டத்தில் தேநீர் விருந்து செய்து வைத்தார்கள். ஏராளமான பிரமுகர்களும் வர்த்தகர்களும் வந்திருந்தார்கள். புகைப்படம் பிடிக்கப்பட்டது. பின்னர் குமார ராஜாவுக்கு வாழ்த்துப் பத்திரம் மேற்படி சங்கக் காரியதரிசி திரு லெ. அளகிரிசாமி நாயுடு அவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

## குமாரராஜாவின் பதில்.

குமாரராஜா பத்திரத்துக்குப் பதில் அளிக்கையில், சங்கத்தில் 300 மெம்பர்கள் சேர்ந்திருப்பதைக்கேட்டு தாம் சந்தோஷப்படுவதாகவும், சிறிய பெரிய வியாபாரிகள் ஒன்று சேர்ந்து சங்கத்தை வளர்க்க வேண்டு மென்றும், முற்காலத்திலிருந்தைவிட வியாபாரம் மிகுந்து இருக்கிறதென்றும் தந்தி, தபால் வசதிகள் அதிகரித்திருப்பதாலும், சங்கத்தாரின் குறைகள் இன்னின்னதென்று விவரங்களைத்தெரிந்தும், அதற்கேற்ப விவரங்களை அந்த இலாகாவிலிருந்து கேட்டும், கிளைச்சங்கங்களை ஆங்காங்கு ஏற்படுத்தியும், அவ்வவற்றின் சம்பந்தமான விஷயங்களைக் கவனித்தும், குறைகளை உடனுக்குடன் எடுத்துச்சொல்லியும் நன்மைகளைத் தேடிக்கொள்ள வேண்டும் என்றும், ஒரு வருக்காக ஒருவித நன்மையைச் செய்ய முடியாதென்றும் பலர் சேர்ந்து கேட்பது மூலம் குறைகள் நீங்க முடியும் என்றும் மேனுடுகளில் இருககும் சங்கங்களைப்போல இந்திய தேசத்துச் சங்கங்கள் வரவில்லையானுலும், சென்னை, பம்பாய், கல்கத்தா மாகாண இந்திய வியாபார சங்கங்கள், ஐரோப்பியச்சங்கங்கள் நன்முக வேலை செய்கின்றனவென்றும் தென் இந்தியாவில் 10 சங்கங்கள் இருக்கின்றன வென்றும், அவற்றுள் சென்னைக்கு அடுத்தபடியாக கோவைச்சங்கமும், கோவைச் சங்கத்துக்கு அடுத்தாற்போல் திருச்சி சங்கமும் நடைபெற்று வருகின்றன என்றும், திருச்சியில் சுருட்டு வியாபாரம் முக்கிய தொழிலாக நடைபெறுகிற தாகையால் இத்தொழிலின் அபிவிருத்தியை மேன் மேலும் அதிகப்படுத்த இதர நாட்டு வியாபாரச் சங்கங்களின் மூலம் விளம்பரப்படுத்தி நல்ல லாபத்தை அடைய முயற்சிக்கலாம் என்றும் கூறினர்.

இந்தியாவில் மொத்தம் 37 சங்கங்கள் இருக்கின்றன. உங்கள் சங்கம் வலுப்பெற்று வந்ததும் அகில இந்திய சேம்பர் ஆப் காமர்ஸுடன் சேர்ந்து விடலாம். உங்கள் ஜனரல் மார்க்கட்டின் குறைகள் சம்பந்தப்பட்டவரையில் உங்கள் நகர சபை கௌன்ஸிலர்கள் கவனிப்பார்களென்று நம்புகிறேன். உங்கள் மார்க்கட்டுக்கருகில் போஸ்டாபீஸ் வேண்டுமென்ற கோரிக்கை விஷயமாய் சென்னை போஸ்டு மாஸ்டர் ஜனரலுடன் கலந்து பேசி ஒரு கிளை ஆபீஸ் ஏற்படுவதற்கு முயற்சிப்பதாகத் தெரிவித்தார். வருமானவரி ரூபாய் 1000க்கு ஏற்படுத்திய விஷயமாகக் குறிப்பிட்டபோது இவ்வரி தற்காலிகமாக விதித்திருப்பதாகச் சொல்லப் பட்டதென்றும், சீக்கிரம் இவ்வரி எடுபட்டுப் போகும் என்றும் வியாபாரிகளை மரியாதையுடன் நடத்தும்படி உத்திரவிட இன்கம்டாக்ஸ்கமிஷனரைத்தாம் வேண்டிக்கொள்ளுவதாயும் பேசினர்.

---


## "ராஜம்"

**ஓர் இனிய சமூக சீர்திருத்தக்கதை.**

"வர்த்தக ஊழிய"னில் பிரதிமாதமும் வெளிவந்துள்ள இக்கதையை ஒன்று சேர்த்து புத்தக ரூபமாக வெளிவருகிறபடியால் புத்தகத்தை வாங்கி கதையை தொடர்ச்சியாக வாசிக்கவிரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும். மேலும் வகுப்புமுன்னேற்றம், சமூக முன்னேற்றம் விரும்பும் பள்ளியில் பயிலும் சிறுவர் சிறுமியர் யாவரும் இச் சிறு புத்தகத்தை அவசியம்படித்தல் வேண்டும்.

விலாசம்:—

எப். எஸ். ஆர். சந்திரன்,
தெப்பகுளம் போஸ்டு,
திருச்சி ஜில்லா.

---

## சென்னையில் ஏஜண்டுகள் தேவை.

"வர்த்தக ஊழியன்" பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், விற்கவும், விளம்பரங்கள் சேகரிக்கவும் செல்வாக்குள்ள ஏஜண்டுகள் சென்னையில்தேவை.

மானேஜர் "வர்த்தக ஊழியன்"
திருச்சினுப்பள்ளி.

# "வர்த்தக ஊழியன்" முதலாவது ஆண்டு அறிக்கை.

தலைவரவர்களே! அன்பர்களே!

இந்தியாவின் முக்கிய நகரங்களில் ஒன்றாய் விளங்கும் இத்திருச்சினாப்பள்ளியில் வர்த்தகத் தொழில் முன்னேற்றமடைந்துகொண்டு வந்தபொழுதும், தற்காலமிருக்கும் பொருளாதார நெருக்கடியில் வர்த்தகம் முன்னிருந்த நிலைமையில் இல்லாதிருந்தும், வர்த்தக சம்பந்தமான பத்திரிகை ஒன்று இவ்வூரில் வெளியிடவேண்டுமென்று பல வர்த்தகர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வர்த்தகர்களுக்காக ஊழியம் செய்யும் நோக்கத்தைக்கொண்டு சென்ற 1932-ம் ஆண்டு ஜுலை மாதத்தில் "வர்த்தக ஊழியன்" என்ற பெயருடன் மாதப்பத்திரிகையாக வெளியிட்டோம்.

பத்திரிகைத் தொழிலை நடத்துவது மிகமிக கஷ்டம்என்பது பத்திரிகைகளை நடத்தியவர்கள் மட்டும் அறிவார்களேயன்றி மற்றவர்களுக்கு அதிகமாகத் தெரியவராது. நமது பத்திரிகை ஆரம்பித்த ஆறுமாதங்கள் வரையிலும் திருச்சி ரெயில்வே தொழிலாளர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுவந்தது. ஏழாவதுமாத இதழ் அச்சுக்குப்போகும் சமயத்தில் அச்சுக்கூட நிர்வாகிகளுக்குள் ஏற்பட்ட தகராறுகளின்பேரில் நமது பத்திரிகையை அச்சிட மறுத்துவிட்டார்கள். அச்சமயம் நாம்பட்ட சிரமத்தை இறைவன் ஒருவனே அறிவானாகையால் அதைப்பற்றி அதிகமாய்க்கூறத் துணியவில்லை. நமது பத்திரிகை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளரவேண்டுமென்ற இறைவனது கருணையிருந்ததின்மேல் அச்சிட முடியாமலிருந்த ஏழாவதுமாத இதழை தொடர்ச்சியாக தாம் அச்சிட்டுக்கொடுப்பதாகவும், நமது பத்திரிகையை நிறுத்தாது வெளியிடும்படி நமக்கு ஊக்கமளித்து நாளதுவரை அச்சிட்டுக் கொடுத்துவரும் ஸ்ரீநிலயம் பிரஸ் சொந்தக்காரர் திருவாளர் V. சுந்தரராஜலு நாயுடு அவர்களுக்கு நமது வந்தனம் உரியதாகுக. மேலும் பல அன்பர்கள் நமது பத்திரிகையின் வளர்ச்சிக்காக விஷயதானம் செய்தும், விளம்பரங்கள் கொடுத்தும், சந்தாதாரராகச் சேர்ந்தும் உதவி புரிந்ததை என்றும் மறக்க முடியாது.

வர்த்தக ஊழியனில் பிரதி மாதந்தோறும் வர்த்தக முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பல கட்டுரைகள் வெளிவந்தும் வர்த்தகர்கள் இன்னும்போதிய ஆதரவளிக்க முன்வராத காரணம் தெரியவில்லை. ஒருசிலர் பத்திரிகைகள் பலதோன்றி மறைகின்றதென்றும் அதைப்போல் இதுவும் தோன்றி மறைந்துவிடுமோ என்ற ஐயப்பாடுகொண்டு நமது பத்திரிகையின் வளர்ச்சியைக் கவனித்து பின் ஆதரவு கொடுக்கலாமென்று நினைத்திருந்ததாக தெரியவந்தது. அவ்விதம் எண்ணியிருந்த அன்பர்கள் இன்று நடைபெறும் நிகழ்ச்சியிலிருந்தும், நமது பத்திரிகை பிரதி மாதமும், காலம் தவறாது ஒவ்வொரு ஆங்கில மாத முதல் வாரத்தில் வெளிவருவதை பார்த்தாகிலும் அவ்வித எண்ணத்தை அறவே ஒழித்து நமது பத்திரிகைக்கு பேராதரவு அளிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

"வர்த்தக ஊழியன்" முதலாவது இதழில் நமது பத்திரிகையின் நோக்கத்தை கீழ்கண்டவாறு வெளியிட்டிருக்கிறோம்:—

"இந்திய வர்த்தகமும், கைத்தொழிலும் வளர்ச்சிகுன்றி நிற்பதின் காரணங்களை ஆராய்ந்து அவற்றை சீர்திருத்துவதற்கும், வர்த்தகத்தையும், கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்குமான வழிகளை எடுத்தியம்புவது வர்த்தக ஊழியனின் கடமைகளில் ஒன்றாகும்."

இதை அனுசரித்து நம்மால் கூடுமானவரையில் இவ்வாண்டில் வெளியிடப்பட்ட இதழ்களில் வெகு தெளிவாகவும், விரிவாயும் வெளியிட்டு வந்திருப்பதை "வர்த்தக ஊழியனை" இடைவிடாது வாசித்துவரும் அன்பர்கள் அனைவருக்கும் நன்குதெரியும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 8 AUG 1933 MADRAS

நமது நாட்டில் பலர் இன்னும் வர்த்தகத்தில் போதிய தேர்ச்சியடைந்தார்களில்லை. கலாசாலைகளில் பட்டம்பெற்று அடிமைத் தொழிலுக்காக அலைகின்றவர்கள் வர்த்தக முன்னேற்றத்திற்கான விஷயங்களைக் கற்று உழைத்துவந்தால் இந்தியதேசம் மேலானநிலைமையை அடையுமென்பதற்கு ஆக்ஷேபனையிருக்காது. "வர்த்தகம், கைத்தொழில், முதலானவைகளைப்பற்றி வியாசங்கள் பத்திராதிபருக்கு எழுதியனுப்பினல், பிரசுரிக்கப்படும் நல்ல வியாசங்களுக்கு தகுந்தாப்போல் சன்மானம் கொடுக்கப்படும்" என்று விடாமல் வர்த்தக ஊழியனில் பிரசுரம் செய்துவந்தும் ஒருசிலரே எழுதியனுப்பினர்கள் இதனல் நமது ஜனங்கள் இன்னும் வர்த்தகத்துறையில் நன்கு தேர்ச்சிபெறவில்லையென்று தெரிகிறதல்லவா? இன்று நடைபெறும் வருடபூர்த்திக்கு தலைமை வகித்து சிறப்பிக்கச் செய்யவந்த செட்டிநாட்டு குமார ராஜா அவர்கள் போதிய கல்வி, அறிவும், பட்டம் பெற்றிருந்தும், வர்த்தகத்துறையில் ஈடுபட்டு தென்னிந்திய வர்த்தக சங்கத்தில் மிகவும் உழைத்து வருகின்றார். இவரைப்போல் எல்லோரும் உழைக்க முன்வருவார்களானல் நம்முடையதேசம் மேல்நாட்டாருடன் சரிசமமான நிலைமையையடையுமென்பதற்கு ஆக்ஷேபணையிருக்காது. மேல்நாட்டாரைப் பார்த்து பொருமைப்படுவதில் யாதொரு பிரயோஜனமும் ஏற்படாது. ஆகையால் வர்த்தகத்துறையில் எல்லோரும் இறங்கி எம்போன்ற பத்திரிகை நடத்துபவர்களுக்கு போதிய ஊக்கமளித்து அதன் மூலமாக தேசத்தின் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்துகொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சென்னை, மைசூர், திருவனந்தபுரம், இலங்கை கவர்ன்மெண்டாரும், தென்னிந்தியா ரயில்வே அதிகாரிகளும் வர்த்தகர்களுக்கு உபயோகப்படும்படியான விஷயங்களை வர்த்தக ஊழியனுக்கு அனுப்பி வருவதற்காக அவர்களுக்கு எம்முடைய மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இந்திய கவர்ன்மெண்டாரும் நம்முடைய பத்திரிகையை ஆதரித்து தொடர்ச்சியாக பத்திரிகையின் கொள்கைகளுக்கு ஏற்ற விஷயங்களை அனுப்பச்சொல்லி பலமுறை கேட்டுக்கொண்டிருந்தும் அதிகாரிகள் அனுப்பத்தாமதித்து வருவதால் இன்னும் பல விஷயங்களை நமது பத்திரிகையில் வெளியிடமுடியவில்லை. மற்ற கவர்ன்மெண்டாரும், ரயில்வே கம்பெனியார்களும் வர்த்தக சங்கங்களும், நமது பத்திரிகைக்கு விஷயங்களை அனுப்பிவைக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறோம்.

நம்முடைய பத்திரிகையின் ஆண்டுவிழாவை ஜூன் மாதத்தில் நடத்தி (இரண்டாம் ஆண்டு முதல் மாதமாகிய) ஜூலை மாத பதிப்பில் பிரசுரம் செய்யவேண்டுமென்று எவ்வளவோ முயற்சி எடுத்துக்கொண்டும், இன்று தலைமை வகிக்கும் உயர்திருவாளர் எம். ஏ. முத்தையசெட்டியார் அவர்களின் பல அலுவல்களினல் வரக்கூடாமையை முன்னிட்டு அவ்விதம் செய்யமுடியவில்லை. ஆனலும் வர்த்தகத் தலைவர்களில் ஒருவராக விளங்குகின்ற அவரையே தலைவராகக்கொண்டு ஆண்டுவிழாவை நடத்தவேண்டுமென்று உறுதியாக யிருந்ததின்மேல் ஒருவாறு நிறைவேறியதற்காக கடவுளை பிரார்த்திப்பதுடன், அவர் இன்று வந்து தலைமைவகித்ததற்காக அவருக்கு எம்முடைய மனமார்ந்த வந்தனத்தைதெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கடந்த ஒரு வருடமாக "வர்த்தக ஊழியனை" வளர்த்து வருவதில் பல கஷ்டங்களையும் நாம் அனுபவிக்க நேரிட்டதென்று சொல்வோமாகில் அதுமிகைபடக்கூறியதாகாது. இத்தொழிலில் நெருங்கிப் பழகுவோருக்குமட்டும் இதன் உண்மை நன்கு புலனகும். பணமின்றி இக்காலத்தில் எக்காரியமும் எளிதில் சாதிக்கமுடியா தென்பது யாவரும் அறிந்தது. வர்த்தக வளர்ச்சிக்கும், வர்த்தகர்களின் முன்னேற்றத்திற்கும், நாட்டின் பொருளாதாரநிலை உயர்வுக்கும், திருச்சினப்பள்ளியில் தற்பொழுது நிலவிவரும் வர்த்தக ஊழியனுக்கு ஒவ்வொருவரும் தங்களால்கூடிய பேராதரவை தக்கவாறு அளித்து "வர்த்தக ஊழியன்" என்றும் வெளிவரும்படிசெய்ய, இங்கு குழுமியுள்ள அனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தங்கள் ஊழியன்,

திருச்சினப்பள்ளி
23—7—33.

டி. வி. கே. நாயுடு,
பத்திராதிபர், "வர்த்தக ஊழியன்."

சென்னை மேயரும், செட்டிநாட்டு குமாரராஜாவுமாகிய
உயர்திருவாளர்

**எம். எ. முத்தைய்ய செட்டியார் பி. ஏ.,**

எம். எல். சி. அவர்கட்கு,

**திருச்சி ஜில்லா தமிழ வியாபாரிகள் சங்கத்தின்**

## நல்வரவேற்பு.

**சென்னை நகரத் தந்தையே!**

இம்மாகாணத்தின் தலைநகருக்கு அடுத்து நின்று, அதற்கு ஒப்பாலும், உவமையாலும் பொருந்திநின்று, புராணப்பெருமையாலும், புராதனப்பெருமையாலும் பொலிவுபெற்று வெற்றிமாலை சூடிய வீரத்தமிழரசர்களின் ஆட்சி மகிமையும்பெற்று, நீர்வளமும், நிலவளமும் ஒருங்கேயமைந்து செழித்துவிளங்கும் எங்கள் திருச்சிராப்பள்ளி தங்கள் வருகையினால் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றது, தங்கள் வரவு நல்வரவாகுக!

**வர்த்தகர் நண்பரே!**

நாங்கள் எக்காலை மறந்திடினும் 1932-ம் ஆண்டு செப்டம்பர்மீ 21-ம் நாளை ஒருக்காலும் மறந்திடோம். அந்நந்நாளிற்றான் "திருச்சி ஜில்லா தமிழ வியாபாரிகள் சங்கம்" தோன்றி தனித்துநின்ற வியாபாரிகளை ஒன்றுகூட்டி ஒத்துழைப்பை ஓங்கச்செய்து, வணிகர் நலன்களைப் பெரிதும் மனதிற்கொண்டு, சென்னை தென்னிந்திய வர்த்தக சங்கத்துடன் இணைக்கப்பெற்று, சிறந்து விளங்குவதைத் தங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குறை தவிர்க்கும் குன்றே!**

நகரின் முக்கிய வியாபார ஸ்தலமாகிய ஜெனரல் மார்க்கட்டின் பெரும்பகுதி இன்னும் புதுப்பிக்கப் பெறாமலும், சுகாதார வசதிகள் அமைக்கப்பெறாமலும், போலீஸ் பாதுகாப்பு இல்லாமலும், மார்க்கட்டிற்கு சமீபத்தில் போஸ்ட் ஆபீஸ் இல்லாமலும் வர்த்தகர்களாகிய எங்கட்கு பெரிதும் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. இக்குறைகளை நீக்கும் பொருட்டு அதனதன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அலைந்தும், கண்டும், கேட்டும், இதுகாறும் பயன் பெறவில்லை. ஆகவே இவற்றைத் தங்களிடம் தெரிவித்து தங்கள் செல்வாக்கின் மூலம் எங்கள் குறைகளை நிவர்த்திக்க ஏற்ற முயற்சிகளைச்செய்து உதவி புரியுமாறு தங்களை வேண்டுகிறோம்.

**சட்ட சபையின் நிபுணரே!**

உலகப்பொருளாதார நெருக்கடியாலும், வியாபாரக் குறைவாலும், பீடிக்கப்பெற்று வருந்துகின்ற எங்கள் மனம் "ஆயிரம் ரூபாய் வருமானத்திற்கும் வருமானவரி" என்ற சட்டத்தால் பெரிதும் புண்பட்டுவிட்டது. வருமானவரி நிலையத்தின் தலைவர்கள் வியாபாரிகளிடத்து நீதியும், கருணையும் காட்டுகின்றார்களில்லை. நெடுநேரமானாலும் எங்களை நிற்கவைத்து கணக்குகளைப் பார்ப்பதிலும், கேள்விகள் கேட்பதிலும் முழுகவனத்தையும் செலுத்துகின்றார்கள். எங்களது இப்பெருங்குறையை சட்டசபையின் மூலம் நிவர்த்தித்து ஏழை வியாபாரிகளுக்கு ஆறுதல் அளிக்க முன்வரவேண்டுகின்றோம்.

**இளவரசே!**

தாங்கள் இனி மேன்மேலும், மிகப் பொறுப்புவாய்ந்த பெரும்பதவிகளைப்பெற்று, பலருக்கும் பணிசெய்யும் ஆற்றலையும் பெற்று, என்றும் நல்வாழ்வு வாழவேண்டுமென்று இச்சைப்படுவதுடன், தங்கள் அன்பிற்கு பன்முறை வந்தனமும், தங்கள் இன்புறு வாழ்க்கைக்கு நல்வாழ்த்தும், தங்கள் வருகைக்கு நல்வரவும் கூறுகின்றோம்.

தங்களன்பிற்குரிய,

திருச்சிராப்பள்ளி.
23—7—33.

திருச்சி ஜில்லா தமிழ வியாபாரிகள்
சங்கத்தின் அங்கத்தினர்கள்.

## திருச்சிராப்பள்ளி “வர்த்தக ஊழியன்” ஆசிரியர்

உயர்திருவாளர்

## டி. வி. கே. நாயுடு அவர்கட்கு

“வர்த்தக ஊழியன்” முதலாம் ஆண்டு விழாவில்

திருச்சி நகர வர்த்தகர்கள் அன்புடன் கொடுத்த

## நன்றி அறிதல் பத்திரம்.

**வர்த்தகர் நண்ப!**

மேல்நாட்டு வர்த்தக முறைகளையும், கீழ்நாட்டு வாணிப முறைகளையும் சீர்தூக்கிப் பார்த்து வர்த்தகர்கள் ‘பத்திரிகைகளின்றிப் பலன்பெற முடியாது’ என்ற உண்மையைக் கண்டு, வர்த்தகர்களுக்கு ஊழியஞ்செய்ய விரும்பி அப்பெயராலேயே ஒருமாதத் தாள்நடத்தி ஓராண்டு முடித்து ஈராண்டு துவக்காமுன் பத்திரிகையின் மூலம் தாங்கள் எங்கட்குச்செய்த உதவியையும், நன்றியையும் நாங்கள் எக்காலத்தும் மறவோம்.

**தன்னலங்கருதாப் பெரியோய்!**

இந்நகரில் தோன்றிய எல்லாச்சங்கங்களிலும் தாங்கள் தங்கள் இளமை தொட்டே கலந்துகொண்டு, அவைகளில் மிகப் பொறுப்புவாய்ந்த பதவிகளையும் வகித்து, திறம்பட நடாத்தி, ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளையே வாழ்க்கையின் லட்சியமாகக்கொண்டு எழுத்தாலும், சொல்லாலும் இனிது விளக்கி, இயக்கத்தின் ஆங்கில, தமிழ்ப்பத்திரிகைகள் பல-வற்றிற்கும் ஊதியம்பெறா நிருபராய் விளங்கி உழைத்துவருகின்றதை நாங்கள் நன்கறிவோம்.

**ஏழைகட்கிரங்கும் ஏறே!**

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்களின் குறைகளை உடனே ஒழிக்கவேண்டுமென்ற ஆர்வத்தினால், தாங்கள் அல்லும் பகலும் உழைத்து உழைத்து, உடல்மெலிந்து, உத்தியோகமிழந்து, பெருந்தொகையையும் பறிகொடுத்து, சிறையும் புகுந்துமீண்ட தங்கள் அருஞ்செயலை நாங்கள் என்றென்றும் மறவோம்.

**பொதுநலங் கருதும் புண்ணிய!**

இந்நகரிற் சிலர் சங்கங்களை நிருவி நடத்துவதற்கும், சிலர் மேடைமீதேறிப் பேசுவதற்கும், சிலர் அழகிய கட்டுரைகளை வரைந்து வருவதற்கும், சிலர் பத்திரிகா நிருபர்களாக விளங்கி வருவதற்கும், இன்னுஞ்சிலர் பொதுநலத் தொண்டுசெய்யப் பழகி வருவதற்கும் தங்களின் கூட்டுறவும் ஒரு காரணமாகுமென்பதை உண்மை உணர்ந்த எவராலும் மறுக்கமுடியாது.

**ஊக்கத்திற்சிறந்த உத்தம!**

உங்கள் முயற்சி நன்முயற்சியாகவும், உங்கள் எண்ணம் விரைவில் இனிது நிறைவேறி வெற்றியடையவும் வேண்டுமென நாங்கள் பெரிதும் ஆசைப்படுகிறோம். இதற்காக எங்களால் இயன்ற எல்லா உதவிகளையும் என்றென்றும்செய்ய இசைந்துள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**அன்புநிறைந்த ஆசிரியரே!**

தாங்கள் இன்னும் நெடுங்காலம் வாழ்ந்து எங்களோடு பல்காலும் ஒத்துழைத்து உலக அறிவுப்பெருக்கையும், வர்த்தக அறிவுப் பெருக்கையும் “வர்த்தக ஊழியன்” மூலம் வாரிக்கொடுத்து இந்திய வர்த்தகத்தைப் பிறநாட்டு வர்த்தகங்களுடன் தலைசிறந்து விளங்கும்படிசெய்ய ஆசைப்படுவதுடன் தங்கள் அன்பிற்கு நன்றியறிதலான வந்தனமும் “வர்த்தக ஊழியனுக்கு” வாழ்த்தும் கூறுகிறோம்.

திருச்சிராப்பள்ளி,
23—7—33.

தங்களன்பிற்குரிய,

**திருச்சிராப்பள்ளி வர்த்தகர்கள்.**

## ஆபரணக்கற்களில் பெயர்பெற்றவை எங்கள்
## ஒரிஜினல் ரங்கூன் டைமண்ட்ஸ்.

### ஒரிஜினல் ரங்கூன் வைரங்கள்.

(Registered Trade Name)

Registered Trade Mark. **எல்லா நகைகளுக்கும் உபயோகமானவை**

உண்மை வைரங்களைப்போல் பட்டையுள்ளதும் ரவுண்டு சுத்தமுள்ளதும், பிரகாசிப்பதும், வெண்மையுள்ளதும், காந்தி வீசுவதும், தேய்வு ஏற்படாததும், எல்லாவிதத்திலும் வைரத்தை ஒத்திருப்பதும் எங்கள் ரிஜிஸ்டர்டு "ஒரிஜினல் ரெங்கூன் வைரங்களே"

ஏழைகள் முதல் தனவந்தர்கள் வரையில் வாங்கலாம். ஒருதரம் வரவழைத்து உண்மையை அறியுங்கள். உத்திரவாதம் உள்ளவை. மாதிரி கமலத்திற்கு எழுதுங்கள், பிடிக்காவிட்டால் ரூபாய் வாபஸ் அனுப்புகிறோம்.

இமிடேஷன் பட்டை சிகப்பு, குச்சை சிகப்பு, தளுக்குப் படிக்கம், கெமிகல் டையமன் இன்னும் பலவித நூதன கற்களும், நகைகளும் நயமாய்க் கிடைக்கும்.

**S. அருணாசலம் செட்டி, M. ராமசாமி செட்டி,**

ஷராப் வியாபாரம், பெரியகடைவீதி, திருச்சினாப்பள்ளி.



# T. R. ரெங்கசாமிநாயுடு

**வர்ணம் & கண்ணாடி வியாபாரம்,**

341, 42, பெரியகடைவீதி, திருச்சினாப்பள்ளி.

எம்மிடம் பிரசித்திபெற்ற கம்பெனிகளின் நேர்த்தியான வார்னீஷ், வர்ணங்கள், முகம் பார்க்கும் நிலைக்கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகள், கலர் கண்ணாடிகள்.

ராஜா ரவிவர்மாவின் அழகிய சித்திரப்படங்கள், ஜெர்மன் & இங்கிலீஷ் லேடி & சீனரி படங்கள், போஸ்டு கார்டு படங்கள், படங்களுக்கு வேண்டிய சட்டம் கண்ணாடிகள் கால் அங்குல வெளிச்ச கண்ணாடிகள் டேட்டை, டின் பிளேட் வகைகள்.

திருவிழாக்களுக்கு வேண்டிய கலர் காகிதங்கள், வர்த்தி தகடுகள், கண்ணாடி மணி தினுசுகள், அசல் தங்கம் & வெள்ளி ரேக்குகள் முதலியவைகள் விலை சரசமாயும் நயமானதாயும் கிடைக்கும்.

**ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.**

N. B. வெளியூர் ஆர்டர்களுடன் அட்வான்ஸ் முன் பணம் அனுப்புதல் வேண்டும்.

# சாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள். ( RAILWAY RATES )

(The Railway do not accept responsibility for the correctness of these quotations a reference should be made to the Local Rate Advices & Foreign Rate Circulars issued by the S. I. Ry.)

| சாமான்கள் | எங்கிருந்து | எந்த இடத்துக்கு | ரேட்டு மணங்குக்கு | | எந்த தேதியிலிருந்து | ஷரா |
|---|---|---|---|---|---|---|
| | | | அ. | பை. | | |
| சிண்டர் | கள்ளிக்கோட்டை | பொள்ளாச்சி | 1 | 6 | 15—6—33 | 14—6—34 வரையில் |
| ,, | ,, | துடியலூர் | 1 | 6 | ,, | |
| ,, | கண்ணனூர் | பொள்ளாச்சி | 2 | 0 | ,, | |
| ,, | ,, | துடியலூர் | 2 | 0 | ,, | |
| பாக்கு | நாகபட்டணம் | மாயவரம் | 1 | 6 | 10—7—33 | |
| காஷுநட் | கள்ளிக்கோட்டை | மங்களூர் | 4 | 3 | ,, | 30—9—33 வரை |
| ,, | ,, | ,, | 2 | 6 | 1-10—33 | 31—5—34 வரை |
| பருத்தி | கோயில்பட்டி | தூத்துக்குடி | 2 | 6 | 5—7—33 | 31—8—33 வரை |
| ,, | நாலாட்டின் | ,, | 2 | 6 | ,, | |
| ,, | சாத்தூர் [புத்தூர் | ,, | 2 | 6 | ,, | |
| ,, | நாலாட்டின் ,, | மதுரை | 2 | 9 | 20—6—33 | |
| சீரகம் | நாகப்பட்டணம் | மாயவரம் | 1 | 4 | 10—7—33 | |
| விறகு | அங்காடிபுரம் | கோயம்புத்தூர் | 2 | 6 | 1—7—33 | |
| ,, | மேலட்டூர் | ,, | 2 | 6 | ,, | |
| ,, | கிலாம்பூர்ரோடு | ,, | 2 | 6 | ,, | |
| ,, | வாணியம்பலம் | ,, | 2 | 6 | ,, | |
| ,, | அஜிக்கல் | மங்களூர் | 1 | 6 | 20—6—33 | |
| ,, | மச்சேரி ரோட் | சேலம் மார்க்கட் | 1 | 8 | 1—6—33 | |
| ,, | மேட்டூர் அணை | ,, | 1 | 8 | ,, | |
| ,, | சமுத்திரம் | மதுரை | 2 | 10 | 1—7—33 | |
| மாவு | நாகப்பட்டணம் | மாயவரம் | 1 | 4 | 10—7—33 | |
| தான்யங்கள் | ,, | ,, | 1 | 4 | ,, | |
| அரிசி | எரணுகுளம் | திரூர் | 1 | 6 | 5—7—33 | |
| பருத்தி விதை | கரூர் | ஈரோடு | 1 | 10 | 20—6—33 | |
| தேயிலை | தலைச்சேரி | எரணுகுளம் | 8 | 9 | 5—7—33 | 30—9—34 வரை |
| ஓடுகள் | கொல்லம் | சேலம் மார்க்கட் | 5 | 10 | 17—6—33 | விருத்தாஜலம் மார்க்கம் |
| விறகு | புதுக்கோட்டை | மதுரை | 3 | 0 | 20—5—33 | |
| ,, | கொல்லங்கோடு | செட்டிநாடு | 3 | 6 | 1—6—33 | |
| ,, | ,, | மதுரை | 3 | 1 | ,, | |
| ,, | மணியாச்சி | திருநெல்வேலி | 1 | 0 | 15—6—33 | |
| ,, | கும்பளா | மங்களூர் | 1 | 3 | 1—6—33 | |
| ,, | பய்யனூர் | ,, | 1 | 3 | ,, | |
| மாவு | சென்னை பீச் | காஞ்சீவரம் | 2 | 1 | 25—5—33 | |
| ,, | நாகப்பட்டணம் | கும்பகோணம் | 2 | 0 | 24—5—33 | |
| ,, | ,, | மன்னார்குடி | 1 | 4 | 1—6—33 | |
| ,, | ,, | திருத்துறைபூண்டி | 1 | 3 | 24—5—33 | |
| உப்பு | ஆறுமுகனேரி | பெங்களூர் | 8 | 5 | 5—7—33 | |
| ஓடுகள் | ஆலவாய் | ,, | 5 | 3 | 1—7—33 | |
| சிலேட் சட்டம் | கல்லாயி | கம்பம் | 20 | 8 | 15—6—33 | |
| மக்ன சயிட் குரூட் | சேலம் | சென்னை | 2 | 3 | 6—6—33 | |
| ,, | ,, | அம்பர்நாத் | 10 | 6 | 1—7—33 | |
| சர்க்கரை | கள்ளிக்கோட்டை | மைசூர் | 12 | 0 | 1—7—33 | |
| ,, | ,, | நஞ்சன்கூடு | 12 | 0 | ,, | |
| ,, | ,, | சாமராஜநகர் | 12 | 0 | ,, | |
| ரம்பதூள் | கல்லாயி | திருச்சி கூடேஸ் | 4 | 9 | 17—5—33 | |
| அரிசி | வீர்குடி | நாகப்பட்டணம் | 1 | 1 | 5—6—33 | |
| காகிதம் | புனலூர் | எரணுகுளம் | 6 | 11 | 1—6—33 | |
| ,, | ,, | திருச்சூர் | 8 | 0 | ,, | |
| சர்க்கரை | சென்னை | காஞ்சீவரம் | 2 | 1 | 25—5—33 | |

# உலகப் பொருளாதார மகாநாடு.

(World Economic Conference.)

உலகப் பொருளாதார மகாநாட்டின் பொருளாதாரக் கமிஷனின் தலைவருடைய வேண்டுகோளுக்கிணங்கி சர்வதேச சங்கத்தின் பிரதம காரியதரிசி கோதுமை, ஒயின், நிலக்கரி, மரம், சர்க்கரை, கம்பளிமயிர், பஞ்சு, புகையிலை இப்பதார்த்தங்களின் உலக நிலைமையை எடுத்துக் காட்டும் ஒரு யாதாஸ்தை தயார்செய்தார். அந்த யாதாஸ்தை பின்வருமாறு சுருக்குவோம்:—

## கோதுமை.

1930-ம் வருஷத்திலிருந்து கோதுமையின் உலகப்பயிற்சியையும், ஏற்றுமதி வர்த்தகத்தையும் அரசாங்கங்களால் ஏற்றுக்கொள்ளப்படும் உடன்பாடுகளால் கட்டுப்படுத்துவது என்ற விஷயம் பலசர்வதேசீய மகாநாடுகளில் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக 1930-ம் வருஷம் ரோம் மகா பட்டணத்தில் கூட்டப்பட்ட சர்வதேசீய மகாநாட்டிலும் 1931-ம் வருஷத்திலும் பாரிஸ் லண்டன் இவ்விரு பட்டணங்களில் கூட்டப்பட்ட மகாநாடுகளிலேயும், 1932-ம் வருஷம் ஸ்ட்ரேளா மகா பட்டணத்தில் கூட்டப்பட்ட மகாநாட்டிலேயும் இவ்விஷயம் கவனிக்கப்பட்டது. தற்சமயம் ஆர்ஜென்டைன், ஆஸ்டிரேலியா, கனடா, அமெரிக்கா இந்த தேசங்கள் ஒரு சிறிய கமிட்டியை நியமித்து இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்து வருகின்றன. உலகத்தில் விவசாயத்தையே பிரதான தொழிலாகக்கொண்ட தேசங்கள் பலவற்றிற்கு கோதுமை விஷயம் அத்யாவசியமானது. கோதுமையை விற்கும் விலை உயரும்படியும் கோதுமையை இறக்குமதி செய்யும் தேசங்கள் மிதமான இறக்குமதித்தீர்வைகளைப்போட ஒப்புக்கொள்ளும்படியும் ஒரு சர்வதேசீய பொருளாதார உடன்பாடு பிறக்கும் பக்ஷத்தில் மற்ற வியாபார விஷயங்களைப்பற்றி உலகப் பொருளாதார மகாநாட்டிற்கு விஜயம் செய்திருக்கும் அரசாங்கப் பிரதிநிதிகள் மேற்கண்ட கோதுமை உடன்பாட்டுக்குத் தக்கவாறு தங்கள் வர்த்தகக்கொள்கைகளை மாற்றிக்கொள்வது நிச்சயம். தற்சமயம் உலக ஜனங்களை பாதித்துவரும் பொருளாதார மந்தத்தின் முன் பால் வெண்ணெய் முதலிய பதார்த்தங்களை விற்று உலக விவசாய ஜனங்கள் ஜீவித்து வந்தனர். இறக்குமதித்தீர்வைகள் நாணயக்கட்டுப்பாடுகள் முதலிய இடையூறுகளால் அவ்வர்த்தகம் குறைந்தது. அவ்விடையூறுகளை பொதுவாகக் குறைப்பதற்கு தேசங்கள் ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் மறுபடியும் அந்த வர்த்தகம் செழிப்படையலாம். அது வரையில் கோதுமையின் பயிற்சியைப் பல விவசாய தேசங்கள் குறைப்பதற்கு ஒப்புக்கொள்ளாததுடன் அதை அதிகரிக்க வேண்டுமென்று பேசிக்கொண்டிருப்பது சகஜமே.

## ஒயின்.

பல சந்தர்ப்பங்களில் இப் பதார்த்தத்தின் உற்பத்தியைப்பற்றியும் வர்த்தகத்தைப்பற்றியும் தேசங்கள் கொண்டிருக்கும் போட்டியை உலக அபிவிருத்தி பொருட்டு அடக்கவும் குறைக்கவும் வேண்டுமென்று அரசாங்கப் பிரதிநிதிகள் சொல்லியிருக்கிறார்கள். இப் பதார்த்தத்தை உற்பத்தி செய்யும் பிரதான தேசங்களும் அதை ஏற்றுமதி செய்யும் பிரதான தேசங்களும் அதன் உற்பத்திக்கு கடுமையான சட்டங்கள் மூலமாய் ஒரு எல்லை கட்டியிருக்கின்றனர். விவசாய ஜனங்கள் அச்சட்டங்களை ஆதரிப்பதால் அப்பதார்த்தத்தை தயார் செய்யும் தேசங்களுக்கு லாபத்தை உண்டாக்குவதைத் தவிர அப்பதார்த்தத்தின் விலையை உயர்த்திக்கொள்ள முடியாதென்று அவநம்பிக்கை படுகின்றனர். ஒயினின் விலை உயராவிடில் மேற்கண்ட சட்டங்களால் ஒயினை முன்னைவிட குறைத்து தயார் செய்ய வேண்டுமென்று சொல்லப்படும் விவசாய ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள் இக்காரணத்தால் மேற்கண்ட சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர முடியவில்லை.

## மரம்.

மர விஷயமாய் சர்வதேசீயப் போட்டியை அடக்கவும் குறைக்கவும் 1932-ம் வருஷம் பெரும் பிரயத்தனம் செய்யப்பட்டது சர்வதேச சங்கத்தின் பொருளாதாரக் கமிட்டி பல மீட்டிங்குகளைக்கூடி இவ்விஷயத்தைச் சர்ச்சை செய்தது. இம்மீட்டிங்குகளில் செய்யப்பட்ட தீர்மானங்களில் பிரதானமானவை மர ஏற்றுமதியை சர்வ தேசீய சட்டங்களால் கட்டுப்படுத்தவேண்டுமென்று சொல்லின. 1932-ம் வருஷம் ஜூன் மாதம் வியன்னா பட்டணத்தில் மர ஏற்றுமதி செய்யும் தேசங்கள் கூடி மர வர்த்தகத்தை ஆராய்ச்சி செய்வதற்காக ஒரு ஸ்தாவர சர்வ தேசீயக் கமிட்டியை நியமித்தது. ஆனால் ருஷியா முதலிய மர ஏற்றுமதி செய்யும் பிரதான தேசங்களின் ஒத்துழைப்பில்லாமல் சர்வதேச சங்கம் மர ஏற்றுமதியைக் கட்டுப்படுத்த முடியாமல் அவஸ்தைப் பட்டு வருகிறது.

## நிலக்கரி.

சர்வதேச சங்கப்பொருளாதாரக் கமிட்டியினால் நிலக்கரி உற்பத்தி விற்பனை இவ்விஷயங்களைப்பற்றி எப்படி சர்வதேசீய ஒற்றுமையைப் பிறப்பிக்கலாமென்று 1929-ம் வருஷத்திலிருந்து சர்ச்சை செய்யப்படுகிறது. இவ்விஷயமாய் உலக ஒற்றுமை கூடியசீக்கிரம் பிறக்காவிடில், நிலக்கரி வர்த்தகமும் அதை அண்டி நிற்கும் போக்கு வரவுச் சாதனங்களின் வர்த்தகமும் சீர்கெட்டு உலகப் பொருளாதார மந்தத்தை அதிகரிக்குமல்லவா? 1932-ம் வருஷத்தில் அரசாங்கங்கள் நேரில் சந்தித்து எப்படியாவது ஒற்றுமையடைவேண்டுமென்று பாடுபட்டுப் பயனற்றுப் போயிற்று.

## சர்க்கரை.

சர்வதேசீய சர்க்கரைக் கவுன்சில் இவ்விஷயத்தை உலகப் பொருளாதார மகாநாடு சர்ச்சை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. இதற்குக் காரணம், மேற்கண்ட கவுன்சிலின் அங்கத்தினர்களான சில தேசங்கள் சர்க்கரையின் உற்பத்தியையும் வர்த்தகத்தையும் உலக சட்டங்களால் கட்டுப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சி, இதுவரையில் சர்க்கரை ஏற்றுமதி செய்யாத சில தேசங்கள் திடீரென்று தங்கள் சர்க்கரை உற்பத்தியை அதிகரித்ததால் பயனற்றுப்போனதே. உலகத்தில் உற்பத்திச் செய்யப்படும் சர்க்கரையில்பாதியை சாட்போர்ன் என்ற சர்வ தேசீய ஏற்பாடு கட்டுப்படுத்தியதால் சர்க்கரை வர்த்தகம் கொஞ்சம் அபிவிருத்தியடைந்தது. ஆனால் சர்க்கரையை இதுவரையிலும் ஏற்றுமதிசெய்யாமல் உற்பத்திச் செய்து வந்த பிரதான தேசங்கள் சாட்போர்ன் உடன்பாட்டைக் கையொப்பமிடாதபடியால் அவ்வுடன்பாட்டின் பயன் மிகவும் குறைந்துவிட்டது. ஏனெனில், சாட்போர்ன் உடன்பாட்டை கையொப்பமிட்ட தேசங்கள் சர்க்கரை இறக்குமதி அளவொன்றை மனதில் வைத்துக்

கொண்டு காரியங்களை நடத்தி வந்தன. ஆனால் அவ்வுடன்பாட்டைக் கையொப்பமிடாத தேசங்கள் மென்மேலும் தங்கள் சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்கவே சாட்போர்ன் உடன்பாட்டை மாற்றும் அவசியம் ஏற்பட்டுவிட்டது.

### பஞ்சு.

பஞ்சின் உற்பத்தியை உலக உடன்பாடுகளால் குறைக்கும் விஷயத்தில் சிரத்தை அடைந்திருக்கும் தேசங்கள் சிலவே. அவைகளெல்லாம் ஐரோப்பா கண்டத்தை விட்டிருக்கின்றன அமெரிக்காவின் தெற்கு அங்கங்கள் இவ்விஷயத்தில் பெரும் சிரத்தை அடைந்திருக்கின்றன. பஞ்சின் விலையை பாதிக்கும் காரணங்களில் முக்கியமானவைகளாவது:--

1. ஏற்றுமதியின்மீது தீர்வைகள் முதலிய நிபந்தனைகள்.

2. பெரிய கைத்தொழில் படைத்த தேசங்கள் பஞ்சை வாங்கும் அளவு.

சில தேசங்கள் தம்தம் நாட்டுக்குள்ளே தயார் செய்யப்பட்ட பஞ்சு சாமான்களின் விலையை உயர்த்தி வைத்திருக்கின்றன. பஞ்சை பயிர் செய்யும் தேசங்கள் பஞ்சின் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் குறைக்க ஒப்புக்கொள்ளவேண்டுமானால் பஞ்சை பதார்த்தங்களாகச் செய்யும் கைத்தொழில் தேசங்கள் அப்பதார்த்தங்களை மலிவாக விற்க ஒப்புக்கொள்ளவேண்டும்.

இவ்விதம் விவசாய தேசங்களுக்கும் கைத்தொழில் தேசங்களுக்கும் பெரும் போட்டி நடந்து வருகிறது. உலகப் பொருளாதார மகாநாடு விவசாயம் கைதொழில் இவ்விரு விஷயங்களையும் பரிசிலனை செய்து வருகிறது. விவசாயம் பெருத்த நமது இந்தியாதேசம் மேற்கண்ட மகாநாடு ஜயம்பெரும் பக்ஷத்தில் பெரும் சௌக்கியத்தை அடையுமென்பதைப்பற்றி சந்தேகமும் வேண்டுமா?

* * *

உலகப் பொருளாதார மகாநாட்டின் சப்கமிட்டிகளில் காப்பி, தகரம், சர்க்கரை உற்பத்தி சம்பந்தமாக ஆராய்ந்துவந்த சப்கமிட்டிகள் தங்கள் வேலையை முடித்துக்கொண்டு யாதாஸ்து எழுதிவிட்டன. காப்பி உற்பத்தி விற்பனை முதலியவை சம்பந்தமான பேச்சு வார்த்தைகளைத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. தகரவிஷயத்தில் நெடுக ஒரே விலை அனுஷ்டானத்திற்கு வரும்படி செய்ய வேண்டியது மிகவும் அவஸரமென்றும், உற்பத்தியையும் ஒரு கட்டுக்குட்படுத்த வேண்டுமென்றும் பிரிட்டன், பர்மா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, பெல்ஜியம், காங்கோ, போர்த்துக்கல், மெக்ஸிகோ, ஜப்பான், சீனா, பிரஞ்சு இந்துசீனா ஆகிய தேசங்கள் ஸர்வதேச தகரக் கமிட்டியுடன் விலை வீதாசார நிர்ணய விஷயமாக பேசப்பிரதிநிதிகளை அனுப்பவேண்டுமென்றும் தகர சப் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. சர்க்கரை உற்பத்தி தேசங்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தி மறுபடியும் ஒரு கூட்டத்தைக் கூட்டும்படி சர்க்கரை சப்கமிட்டி யோசனை சொல்லியிருக்கிறது

## தபால் தந்தி கட்டணங்கள்.

கராச்சி இந்திய வர்த்தகசங்கம், ஏற்றுமதிஇறக்குமதிவர்த்தகர்கள்சங்கம் இவற்றின் பிரதிநிதிகளடங்கியதூதுகோஷ்டியொன்று ஜூலை-மீ 20உ பிற்பகலில் தந்தி தபால் இலாகா டைரெக்டர் ஸர் தாமஸ் ரயனை பேட்டி கண்டு பேசியது. அப்போது பிரதிநிதிக் கூட்டத்தார் பின் வருமாறு தெரிவித்துக்கொண்டனர். பொருளாதாரச் சுணக்கம் மிக்க அதிகமாக இருக்கையில் தந்தி தபால் கட்டணங்களை எல்லாம் உயர்த்தியதை வர்த்தகர்களாகிய நாங்கள் கண்டிக்கின்றோம். தபால், தந்தி, கடற்றந்தி, ரெஜிஸ்தரேஷன், இன்ஷ்யூர் கட்டணங்கள் இவை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஏன் அதிகமாக வித்தியாசப்படுகின்றன என்று கேட்கின்றோம். இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வரும் தபால் கடிதங்களுக்கு 2½ பென்ஸ் பெறுமான ஸ்டாம்புகளே ஒட்டப்படுகின்றன. இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக் கனுப்பப்படும் கடிதங்களுக்கு 2½ அணா ஸ்டாம்பு ஒட்டவேண்டியிருக்கிறது. இதனால் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வரும் கடிதத்திற்கான கட்டணத்தைவிட இந்தியாவிலிருந்து சீமைக்கனுப்பும் கடிதத்திற்கான கட்டணம் 100-க்கு 12½ வீதம் அதிகமாக இருக்கிறது. மார்க்கெட் ரிப்போர்ட் முக்கியமானதால் அவற்றை அனுப்புவதற்குச் சமீபத்தில் அளித்த அனுகூலத்தை நீடிக்க வேண்டுமென வற்புறுத்துகின்றோம். தந்திகளை அனுப்புவதில் பெரும் தவறுகள் நிகழுகின்றன. இதனால் சில சமயங்களில் வர்த்தகர்களுக்குபெரும் நஷ்டமேற்பட்டு விடுகின்றது. இம்மாதிரியான தவறுகள் நேர்ந்தால் வர்த்தகர்களுக்கு நஷ்ட ஈடு அளிக்கும்படி விதிகளைத்திருத்த முடியாதா என்று நாங்கள் கேட்கின்றோம். கராச்சிக்கும் லாகூருக்குமிடையில் இரட்டை டிரங்கு டெலிபோன் லயனை ஏற்படுத்த வேண்டுமென்றும் கராச்சிக்கும் பம்பாய்க்கும் மிடையில் நேரானடிரங்கு டெலிபோன் சர்விஸை ஏற்படுத்தவேண்டுமென்றும் நாங்கள் வற்புறுத்துகின்றோம்.

ஸர் தாமஸ் ரயனின் பதில்.

ஸர்தாமஸ் ரயன் விடையளிக்கையில் சொன்னதாவது—உங்களது குறைகளை அனுதாபத்துடன்ஆராய்ந்து பார்ப்பதாக நான் வாக்களிக்கின்றேன். தபால்தந்தி இலாகா சம்பந்தமான புகார்களை இலவசமாக அனுப்ப உரிமை வேண்டுமென கேட்கின்றீர்கள். வடபோர்னியூத்தீவு ஒன்றில்தான் இம்மாதிரி செய்ய அனுமதி யளிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் இம்மாதிரி செய்ய அனுமதித்தபோது ஜனங்கள் நீண்ட கடிதங்கள் எழுதி இந்த இலாகாவையே துஷ்பிரயோகப்படுத்திக் கொண்டனர். தந்தி இலாகா வேலையில் தவறுகள் நேராதவாறு தடுக்க சாத்தியமானவை எல்லாம் செய்யப்படும். கராச்சிக்கும் லாகூருக்கும் மிடையிலுள்ள டிரங்கு டெலிபோன் சர்விஸில் வெகுவாக அபிவிருத்தி ஏற்பட்டு விட்டது. ஆஜ்மீர் வழியாக கராச்சிக்கும் பம்பாய்க்கு மிடையில் நேராக டிரங்கு டெலிபோன் சர்விஸை ஏற்படுத்தும் விஷயம் பரிசீலிக்கப்பட்டு வரப்படுகிறது.

**டிரேட் மார்க்**

உங்கள் டிரேட் மார்க்குகள் பெயர்கள் முதலியவைகளை பிறர் உபயோகித்து உங்கள் லாபத்தை அடையாமலிருக்கும் பொருட்டு, உங்கள் டிரேட் மார்க்குகள், பெயர்களை உடனே தாமதம் செய்யாமல்,

**கல்கத்தா ரிஜிஸ்டர்**

செய்து கொள்ளவும்.

**ரிஜிஸ்டர் செய்ய வேண்டியவைகளை,** பற்றி உடனே அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

**பிரின்ஸ் அண்டு கோ**

டிரேட் மார்க்கு ஏஜெண்டுகள்

நெ. 18. பட்டாபிராம் பிள்ளை தெருவு

தென்னூர், திருச்சினாப்பள்ளி.

"நாணயம் தனி பேண்"

வர்த்தக ஊழியன்

திருச்சினாப்பள்ளி
1933-ஹு ஆகஸ்டு-மீ

# வணிகத் தொழிலும் செட்டிநாட்டு குமாரராஜாவும்

(Kumararajah's Speech.)

செட்டிநாட்டு குமாரராஜா உயர் திருவாளர். எம். எ. முத்தைய்ய செட்டியார் அவர்கள் திருச்சினாப் பள்ளிக்கு விஜயம்செய்த பொழுது அவருக்கு திருச்சி ஜில்லா தமிழ வியாபார சங்கத்தாரால் அளித்த வரவேற்புபத்திரத்திற்கு அவர் சொன்ன பதிலையும், நமது பத்திரிகையின் முதலாவது ஆண்டு விழாவில் தலைமை வகித்து வணிக தொழிலைப்பற்றி செய்தபிரசங்கத்தையும் மற்றோரிடத்தில்பிரசுரித்துள்ளோம். திருச்சி வியாபாரிகளின் சங்கத்தைப்பற்றிபுகழ்ந்து பேசி பின் அவர் "ஒரு வியாபாரியும் தனிப்பட்ட நிலையில் நின்று தமக்கோ அன்றி பொதுவாகத் தொழிலுக்கோ ஏற்படக்கூடிய குறைகளை தீர்த்துக்கொள்ள முடியாது. பல வியாபாரிகள் சேர்ந்து ஐக்ய முறையில் கேட்பதின்மூலம் வியாபாரிகள் தங்கள் குறைகளை நிவர்த்தித்து கொள்ளமுடியும்" என்று அவர் கூறியதை வர்த்தகர்கள் மனதிற்கொண்டு ஒற்றுமையை வளர்ப்பார்களென்று நாம் நம்புகிறோம். ஒற்றுமை ஏற்படின் சங்கம் வலுவடையும். சங்கம் வலுப்பட்டால் குறைகள் நீங்குவது நிச்சயம்.

வர்த்தகர்களின் குறைகளைப் பற்றி பேசுகையில் திருச்சி ஜெனரல் மார்க்கட் விஷயமாக திருச்சி முனிசிபல்சபை அங்கத்தினர்கள் கவனிப்பார்களென்று தாம் நம்புவதாக குமாரராஜா குறிப்பிட்டதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். மார்க்கட்டு குறைகளை நீக்க முனிசிபல் சபையாரிடமே ஆற்றல் உண்டு. அப்படியிருக்க குமாரராஜாவிடம் வர்த்தகர்கள் முறையிடும்வரை முனிசிபல்சபை அங்கத்தினர்கள்வாளாவிருந்ததை நாம் கண்டிக்காமலிருக்கமுடியாது. மார்க்கட் குறைகள் நிவர்த்தியாகவில்லையென்றால் இது யாருடைய குற்றம் என்று நாம் கேட்கிறோம். இதனால் மார்க்கட்டு வர்த்தகர்களிடம் இன்னும்ஒற்றுமைஅதிகரிக்கவில்லையென்றும், சங்கம் போதிய அளவு வலிமை பெறவில்லையென்றும், தற்போது நிலைமையிலிருந்து வெளிப்படையாகிறது. முனிசிபல் சபை அங்கத்தினர்களில் பெரும் பாலோர் வணிக தொழில் செய்பவர்களிருக்கின்றார்கள். ஆயிரக்கணக்காக பணம் எந்த விடத்திலிருந்து முனிசிபல் சபைக்கு கிடைக்கின்றதோ அந்தவிடத்திலுள்ள குறைகளை நீக்க முனிசிபல் சபையாருக்கு மனம் இசையாதிருப்பது வருந்தத்தக்கவிஷயம்தான்.

நம்முடைய திருச்சி முனிசிபல் சபைப்பிரமுகர்கள் வசதி செய்து கொடுக்க முடியவில்லையென்று கைவிட்ட மார்க்கட்டுக்கருகில், போஸ்டாபீசு ஸ்தாபிக்கும் விஷயமாய் தாம் சென்னை மாகாண போஸ்டு மாஸ்டர் ஜனரலுடன் கலந்து பேசி அதை ஏற்படுத்திக் கொடுக்க முயற்ச்சிப்பதாயும், வருமானவரி ஆபீசர்கள் வர்த்தகர்களை மரியாதையுடன் நடத்தும்படி வர்த்தகர்களின் சார்பாக பரிந்து பேசுவதாயும் மிக்க அன்புடன் கூறியதற்கு திருச்சி வர்த்தகர்கள் குமாரராஜாவுக்கு என்றும் நன்றியறிதல் உள்ளவர்களாக விருப்பார்கள் என்று நம்புகிறோம். மேலும் பல துறைகளில் ஈடுபட்டு பொது ஜனசேவை செய்துவரும் பெரியாராகிய குமாரராஜா அவர்களை வர்த்தக சங்கத்தார் மேற்சொன்ன போஸ்டாபீசு ஸ்தாபன விஷயமாயும், வருமானவரி இலாகாவில்மரியாதை பெரும் விஷயமாயும் அடிக்கடி ஞாபகமூட்டிவருவார்களென நம்புகிறோம்.

"வர்த்தக ஊழியனின்" ஆண்டு விழா தலைமை வகித்து ஆற்றிய சொற்பொழிவு போற்றற் குரியதாகும். அதனை ஒவ்வொரு வர்த்தகரும் ஊன்றி படித்தல் வேண்டும். கூட்டு வியாபாரம் செய்ய விரும்பும் ஒவ்வொருவருடையமனதிலும் அவரது நன்மொழிகள் பசுமரத்தாணி போலப்பதிந்திடல் வேண்டும்.

தமிழர் பண்டைய வர்த்தகப் பெருமையை பெரிதும் எடுத்துக் காட்டியுள்ளார். "முக்கியமாய்த் தென்னிந்தியர்கள் வர்த்தகத்தில் ஊக்கமற்றவர்களாய் இருந்திருக்கவில்லையென்று" அவர் கூறுங்கால், நமக்கு ஒரு விஷயம் ஞாபகத்தில் வருகின்றது. தமிழ் வேந்தர்களது நாட்டில் பல்வேறு நாட்டார் வணிக தொழில் நிமித்தம் வந்து குடியேறினர் என்று, குமாரராஜா தெரிவிக்கின்றார். நம் நாட்டாரும் பிறநாடுகளுக்குச் சென்று வணிக தொழில் புரிந்தனர் என்பதற்கும் தக்க ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சைனா தேசத்திலுள்ள 'ஆல்டாய்' மலைவரை தமிழரசர்கள் சென்றுள்ளார்கள் என்பதற்கு சிலாசாசனம் அகப்பட்டுள்ளது. மேலும் வர்த்தகத்துறையில் கூட வெகுதூரம்முன்னேற்றம் பெற்றிருந்தனர் என்பதற்கு சுமத்ரா, ஜாவா முதலிய விடங்களிலும், மேனாடுகளிலும் சில அடையாளங்கள் காணப்படுகின்றன. கப்பு

செட்டி நாட்டு குமாரராஜா

திரு. எம். எ. முத்தைய்ப செட்டியார் அவர்கள்

நமது பத்திரிகையின்

போஷகராக இருக்க அன்புடன் இசைந்துள்ளார்.

லோட்டும் தொழிலிலும் நம்மவர்கள் ஒரு காலத்தில் மிகச்சமர்த்தர்களாக விளங்கினதுமுண்டு.

ஆங்கிலேயர்கள் போன்றும், மேனாட்டார் போன்றும், வணிக தொழிலை விர்த்தி செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி கூறிவிட்டு "நாணயம் நனி பேண்" (நாணயத்தை நன்றாககாப்பாற்று) என்றார் நமது செட்டிநாட்டு இளவரசர். நாணயம் என்று தவறுமோ அன்றே வர்த்தகம் சீர்குலைந்து போகும் எனவே குமாரராஜா கூறியது போல் நாணயமே வர்த்தகருக்கு பெரியதோர் உற்றதுணைக்கருவி. அதனையே உறுதியுடன் கடைப்பிடித்தல் வேண்டும். நம்நாட்டில் கூட்டாளித்தொழில் விருத்தியடையாமற் போனதற்கு குமாரராஜா சொல்லும் காரணம் முக்யமானதாகும். அதனை வர்த்தகர்கள் நன்கு கவனிக்கவேண்டும். "இரண்டோருவர் வியாபாரத்துக்கு ஆரம்பிக்கு முன்னரே ஒருவர்மேலோருவர் சந்தேகங் கோண்டவராய் கூட்டாளி செய்யும்வேலை ஒவ்வோன்றையும் ஐயத்துடன் நோக்கினல் கூட்டுறவு நின்று நிலைப்பதேப்படி" எனக் குறிப்பிட்டுள்ளார். நம்நாட்டில் இதுகாறும் தோன்றிய ஒவ்வொரு கூட்டுத் தொழிலையும் அதன் நிர்வாகப் போக்கையும், அவை எங்ஙனம் முறிந்தனவென்பதையும் ஆராயப்புகின் ஒவ்வொன்றையும் ஐயங் கொண்டு நோக்குதலும், பரஸ்பர சந்தேகமும், போதியவளவு கல்வியறிவின்மையும், உலகவாழ்வின் அனுபவமின்மையும், தொழிற்பயிற்சி குறைவும் அவ்வணிகத் தொழிற் கூட்டாளிகளிட மிருந்திருக்கக் காணலாம். எனவே செட்டிநாட்டு இளவரசர் தமது சொற்பொழிவில் விளக்கிக் காட்டியவற்றை, வர்த்தகர்கள் ஊன்றிக் கவனித்து, அவர்கள் அளித்த வர்த்தகப் புத்திமதிகளை ஏற்று, வணிகத்தொழில் முன்னேற்றத்தை நாடுவார்களெனநாம் நம்புகிறோம்.

---

# சிறுமணித்திறள்.

(Editorial Notes.)

## வழிக்கு வந்தாயா?

ஜப்பான் தேசத்து சாமான்களுக்கு வரியை உயர்த்தியதின் மேல் இந்திய பருத்தியை வாங்காமலிருக்க வேண்டுமென்று ஜப்பான் பூச்சாண்டி காட்டியது பனங்காட்டு நரி சலசலப்புக் கஞ்சாது என்ற பழமொழிப்படி இந்தியாவானது சட்டைசெய்யாமலிருந்ததின் மேல் இந்தியாவுடன் வர்த்தக விஷயமாக ராஜி பேசுவதற்கு ஒருதூது கோஷ்டி செப்டம்பர் மாத கடைசியில் இந்தியாவுக்கு வருகிறது. அக்டோபர் மாதத்தில் ராஜி பேச்சு ஆரம்பமாகுமென்றும், தெரிகிறது. இந்தியர்கள் இச்சமயத்தில் உஷாராக இருந்து ஜப்பானியர்களிடம் ஏமாந்து போகாமலும், தங்கள் உரிமைகளை விட்டுவிடாமலும் பார்த்துக்கொள்ளும்படியாக கேட்டுக்கொள்ளுகிறோம்.

## வெள்ளிக்கும் ஆபத்தா?

இந்தியா வருடந்தோறும்1934ம் வருடம் ஜனவரி முதல் தேதியிலிருந்து நான்கு வருடத்திற்கு,வருடமொன்றுக்கு 350 லட்சம் அவுன்சு வெள்ளி விற்பனை செய்யலாமென்று உலகப் பொருளாதார மகா நாட்டிற்கு வந்த பிரதிநிதிகளிடம் தீர்மானமாகி யிருக்கின்றன. இதனல் இந்தியாவிலிருந்து 1400 லட்சம் அவுன்சு வெள்ளி விற்பனை செய்யப்படும். இப்பொழுது இந்திய சர்க்காரிடம் 104 கோடி ரூபாய்கள் வெள்ளியிருக்கிறது. தங்கம் வாராவாரம் இந்தியாவிலிருந்து போய்க்கொண்டிருக்கின்றது. தங்கத்தின் விலை இன்னும் இறங்கவில்லை ஆனல் பொது ஜனங்களோ தங்களிடமிருந்த தங்க நகைகளையெல்லாம் தங்கத்தின் விலை யேற்றத்தி[illegible] ஆசையினல் விற்றுவிட்டு இப்பொழுது விலை இறங்காமலிருக்கும் நிலைமையைக் கண்டு நெருப்பும் போய் வாய்தவிடும் போனது போல் அணிந்து கொண்டிருந்த தங்க நகைகளை விற்றதோடும் நில்லாமல் நகைகளை ஈடுவைத்துபணம் வாங்கி பிழை[illegible]கவும் வழியில்லாமல் ஜனங்கள் பரிதவிக்கின்றார்கள். இம்மாதிரியான நிலைமையிலிருக்கையில் வெள்ளிக்கும் ஆபத்து வரப்போகிறதாம்.

---

# நாணயமாற்றம்.

Exchange (31—7—33)

| | பென்சு |
|---|---|
| பாங்குரேட் லண்டன் தந்தி | 18 |
| பாங்குரேட்லண்டன்தரிசனம் | 18 |
| லண்டன் தந்தி விற்கிற விலை. | 18 1/32 |
| தரிசன உண்டி விற்கிற விலை | 18 1/32 |
| தந்தி வாங்குகிற விலை | 18 1/8 |
| ஷை தரிசன உண்டி | 18 1/8 |

லண்டன்—அமெரிக்கா மேல் தந்தி ஸ்டார்லிங் பவுன் 1-க்கு டாலர் 4.46

பாரிஸ் லண்டன் மேல் தந்தி ஸ்டார்லிங் பவுன் 1-க்கு 'பிராங்கு 85 1/4

பிரான்ஸ் மேல் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு பிராங்கு 615.

ஜர்மனி தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு மார்க்கு 100.

அமெரிக்கா தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 318.

அமெரிக்கா தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 281.

சிங்கப்பூர் தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 158.

சிங்கப்பூர் தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 150.

ஜப்பான் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை என் 100-க்கு ரூ. 90.

ஹாங்காங் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 99 (பெயரளவு)

ஷாங்காய் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 92 (பெயரளவு)

ஜப்பான் 2-மாததவணை உண்டி வாங்குவது என் 100-க்கு ரூ. 90.

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு கில்டர் 61.

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி வாங்குவது ரூ. 100-க்கு கில்டர் (பெயரளவு)

தயவுசெய்து "மைதலின்" பற்பொடியை உபயோகியுங்கள்.

## வர்த்தகக்குறி வழக்கு

சென்னை மண்ணடி ஸ்பேட் கிளாவர் பீடி கம்பெனி சொந்தக்காரர் ஜனாப் எம். முகம்மது உமர் சாயபு அவர்களின் பெயரையும், அவருடைய ஸ்பேட் கிளாவர் பீடிமார்க்கையும் சென்னை வண்ணாரப்பேட்டை பாய் பீடி வியாபாரம் செய்யும் கணபதிசுந்தரம் பிள்ளையும், வெங்கடாஜலம் பிள்ளையும் சேர்த்து உபயோகித்து வியாபாரம் செய்ததாக சைதாப்பேட்டை சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் பிராது செய்யப்பட்டது. மாஜிஸ்திரேட் விசாரணைசெய்து கணபதிசுந்தரம் பிள்ளைக்கு மூன்று மாதம் கடினகாவலும், 75-ரூபாய் அபராதமும் விதித்தார். வெங்கடாஜலம் பிள்ளைக்கு மூன்றுமாதம் கடினகாவலும் 25-ரூபாய் அபராதமும் விதித்தார்.

* * *

ரங்கூன் ஹைக்கோர்ட்டு நீதிபதி ஜஸ்டிஸ் லீச், பி. ஈ. பால்ஸனும் வேறொருவரும், எம். எம். ஹபிப் மீது தொடர்ந்திருந்த வழக்கில் தீர்ப்புக் கூறினார். இவ்வழக்கில் எதிரிகளுக்குத்தடையுத்தரவு பிறப்பிக்குமாறும், வாதிகளுக்கு ரூபாய் 500 நஷ்ட ஈடு கொடுக்குமாறும் கோரப்பட்டிருந்தது.

வாதிகளுக்காக மிஸ்டர் போஜெட்டும் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் கலியாணவாலாவும் ஆஜரானார்கள்.

வழக்கைப்பற்றி வாதி தரப்பில்கூறப்பட்ட விபரமாவது:— "பம்பாய் கார்ட்டர், கார்லைல் மாணியுபாக்சரிங்கம்பெனியார், எதிரிக்கு காபி சப்ளை செய்துவந்தனர். காப்பி டின்களின் மீது எதிரி போட்டிருக்கும் ராப்பர் (உறை) வாதிகள் தங்கள் காபி டின்களுக்கு உபயோகிக்கும் ராப்பரின் இமிடேஷனாகும். இதனால் பிரதிவாதிகள் தங்கள் காபியை வாதிகளின் காபி என்று சொல்லிவிடக்கூடும். ஆகவே (1) பிரஸ்தாப ராப்பர்களையாவது, வாதிகளின் ராப்பரையொத்த வேறு (கலர்செய்யப்பட்ட ராப்பர்களையாவது பிரதிவாதி உபயோகிக்காதிருக்கத் தடையுத்தரவு பிறப்பிக்க வேண்டும். (2) இந்த ராப்பரை உபயோகித்து எத்தனை டின்கள் ரங்கூனிலும் மற்ற இடங்களிலும் விற்கப்பட்டனவென்பதற்குக் கணக்கை பிரதிவாதி ஒப்புவிக்க வேண்டும். விற்ற தொகைக்காவது நஷ்டஈடுக்காவது டிக்கிரி பிறப்பிக்கவேண்டுமாய்க் கோறப்படுகிறது. (3) மேற்கூறிய ராப்பர்களோடு கூடியுள்ள டின்களனைத்தையும் பிரதிவாதி ஒப்புவித்துவிட வேண்டும்."

இவ்வழக்கில் நீதிபதி பிரதிவாதி "நெல்ஸன்" என்ற பெயருடனும் வாதிகளின் வியாபாரப்பெயருக்கு (கலரபிள்) இமிடேஷனுயுள்ள வேறெந்தப் பெயருடனும், பிரெஞ்சு காப்பி டின்களை விற்பனைசெய்யவோ, பார்வைக்காகக் கடையில் வைக்கவோ செய்தால் வாதிகள் விற்பனைசெய்யும் பிரெஞ்சு காபி தான் அது என்ற நம்பிக்கையுண்டாக்குமாதலால் அவ்வாறு செய்வதினின்றும் தடுக்கப்பட்டிருக்கிறார்கள்." என்றும், வாதிகளின் காப்பி என்றுசொல்லி விற்பனை செய்யும் மற்றவருக்குப் பிரதிவாதி உதவிசெய்யக்கூடாதென்றும் நீதிபதி தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கின்றார்.

பிரதிவாதியின் விற்பனைக் கணக்கு வேண்டுமென்றாவது நஷ்டஈடு வேண்டுமென்றாவது இப்பொழுது வாதிகள் கோரவில்லையென்றும், செலவுதொகையைப்பெற அவர்களுக்கு உரிமையுண்டென்றும் சொல்லி விசாரணை நடைபெற்ற தினங்களுக்கு நாளொன்றுக்கு 10-தங்கமோராக்கள் வீதம் வாதிகளுக்கு செலவுதொகை கொடுக்கவேண்டுமென்று நீதிபதி உத்திரவிட்டிருக்கிறார்.

* * *

சென்னையில் தயாரிக்கப்படும் தாஜ்மஹால் பீடியைப்போலவே பீடிகளைத் தயாரித்து அவைகளின் பேரில் தாஜ்மஹால் பீடி கட்டுகளின்பேரில் ஒட்டப்படும் லேபிள்களையும், வியாபாரக் குறிகளையும் பூனாவில் அச்சிட்டு தாஜ்மஹால் பீடி சொந்தக்காரர்களின் அநுமதியில்லாமல் விற்று சொந்தக்காரர்களுக்கு நஷ்டத்தை யுண்டாக்கியதாகச் சொல்லி அப்துர் ரஜாக், ஸ்ரீராமமூர்த்தி, உமர் சாயப், கலிப் சாயப், ஜே. நாராயணா என்றவர்கள் பேரில் போலீசார்கொண்டு வந்த வழக்கில் எழும்பூர் போலீஸ் கோர்ட்டு நான்காவது மாஜிஸ்டிரேட் திரு. கோயில்பிள்ளை எதிரிகள்பேரில் இ. பி. கோ. 120, பி. 468, 471, 419, 520 வது பிரிவுகளின்கீழ் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டிருக்கிறது.

---

### பத்திரிகைகள் வரவு.

| | |
|---|---|
| இந்தியத்தாய். | Guardian. |
| நகரதூதன் | Indian Mirror |
| பர்மா நாடு. | Commercial India. |
| ஒற்றுமை | Popular Magazine. |
| சுதந்தரவீரன் | பாலவினோதனி |
| விநோதன் | குலாலமித்ரன் |
| மலாய மித்ரன் | இந்திய விவசாயம். |

## ரயில்வே பகுதி.

[Railway Matters.]

ஜர்மனியிலுள்ள பவாரியன்ஜுஜுக்ஸ்பிட்சு ரயில்வே (Bavarian Zugspitze Railway) அதிகாரிகள் ஒரே தடவையில் 12-க்கு மேற்பட்டு 50 வரையில் கூட்டமாக ஜனங்கள் பிரயாணஞ்செய்தால் 100-க்கு 25-வீதம் டிக்கட் சார்ஜை குறைத்து விடுவதாயும், 100-ஜனங்களுக்கு மேல் பிரயாணம் செய்தால் 100-க்கு 45-வீதம்குறைத்து விடுவதாயும் பிரசுரம் செய்திருக்கின்றார்கள். மேலும் 20-முதல் 39-பிரயாணிகளுக்கு ஒரு டிக்கட்டும், அதற்கு மேற்பட்டு 99-பிரயாணிகளுக்கு இரண்டு டிக்கட்டுகளும், அதற்குமேற்பட்ட 50-பிரயாணிகளுக்கு ஒவ்வொரு டிக்கட்டும் இனமாக கொடுக்கப்படுமாம்.

* * *

போத்தனூர், பொள்ளாச்சி, கோவில்பாளையம், கிணத்துக்கடவு, செட்டிபாளயம், ஸ்டேஷன்களிலிருந்து சென்னை பீச், புதுச்சேரி, கூடலூர் ஜங்ஷன், நாகபட்டணம் ஸ்டேஷன்களுக்கு நிலக்கடலை ஆகஸ்டுமாதம் முதல் தேதியிலிருந்து மணங்கு ஒன்றுக்கு 0—11—0 வீதம் திண்டுக்கல் மார்க்கமாக அனுப்பலாம்.

---


## "இந்தியத் தாய்"

பிரதி, ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்.

சிறந்த

**வாரப் பத்திரிகை.**

சிறு கதைகள், போட்டிப்பரிசு, சங்கீதப் பகுதி, முதலிய கட்டுரைகளுடன் பிரதி வாரந்தோறும் வெளிவரும்.

| | |
|---|---|
| வருட சந்தா உள் நாட்டிற்கு | ரூ. 3-0-0 |
| ,, வெளி ,, | ரூ. 6-0-0 |
| தனிப் பிரதி | ரூ. 0-1-0 |

மானேஜர்,
"இந்தியத் தாய்"
சேலம்.

## WANTED

Capable agents of influence among merchants in all the important towns to canvass subscribers and to get advertisements for "Varthaga Oolian". Liberal terms to really capable workers.

*Apply to*:— The Manager,
**Varthaga Oolian, Trichinopoly.**

# வர்த்தகத் துணுக்குகள்.

## Trade Tit Bits.

பம்பாய் ஆலைக்காரர் சங்கத்தின் தலைவர் திரு. எச். பி. மோடி, மாஞ்செஸ்டரில் பேசியபோது சொன்னதாவது:—இந்திய ராஜீய வாதிகளின் கிரமமான கோரிக்கைகள் விஷயத்தில் லங்காஷயர் வர்த்தகர்கள் விரோதப்பான்மை இன்னும் காட்டி வருவார்களானால், இந்தியப் பருத்தித் தொழிலில் ஈடுபட்டவர்கள் லங்காஷயர் வர்த்தகர்களுடன் ஒத்துழைப்பது மிகவும் சிரமமாயிருக்கும். இந்திய ராஜீய பிரச்னைகளைத் தீர்க்க லங்காஷயரின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்குமென்ற நம்பிக்கை உண்டாகி வரி விதிக்கும் விஷயத்திலும் இந்தியாவின் ஸ்வாதீனத்தை லங்காஷயர் ஒப்புக்கொள்ளுமாயின், இருதேசங்களும் ஒத்துழைத்து நியாயமாகவும் திருப்திகரமாகவும் வருங்காலத்தில் வர்த்தக சம்பந்தம் சௌஜன்யமாக வைத்துக் கொள்ளுவது சாத்தியப்படும்.

திரு. மோடி முதலானவர்களுடன் உட்கார்ந்து விருந்து சாப்பிட்ட லார்டு டார்பி, மேற்குறித்தவாறு ஒரு திருப்திகரமான ஏற்பாடு சாத்தியப்படுமென்றே நம்புவதாகத் தெரிவித்தார்.

*　*　*

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் பருத்தி பட்டுச் சரக்குகளை ஜப்பான் கொண்டுவந்து குவிப்பதைப்பற்றிக் காமன்ஸ்சபையில் விவாதிக்கப்பட்டது. பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் காட்டும் சலுகை ஜெப்பானியப் போட்டியைச் சமாளிப்பதற்குப் போதுமானதாயில்லையென்றும், சில சந்தர்ப்பங்களில் 1-க்கு இரண்டாக வரிகளை உயர்த்தினால்தான் குடியேற்ற நாடுகளின் சலுகை அனுபவத்தில் பயன் தரக்கூடியதாயிருக்குமென்றும், ஜப்பானுடன் நடத்திவரும் பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்தால் பிரிட்டிஷ் நன்மைகளைக் காப்பாற்றக் குடியேற்ற நாடுகள் நடவடிக்கையெடுப்பது சாத்தியப்படுமென்றும் குடியேற்ற நாட்டு மந்திரி ஸர் பிலிப் கன்லிப்லிஸ்டர் சொன்னார்.

*　*　*

1932-33-ல் ஜெனரல் போஸ்டாபீஸ் கணக்குகளைப் பரிசீலனை செய்ததில் எச்செலவும் போக உபரியாயிருந்த தொகை 10,792,000 பவுன் இதுவரை இவ்வளவு தொகை மிச்சமேற்பட்டதில்லை.

இந்தியாவுடன் வியாபார விஷயமாக ராஜி பேசுவதற்கு வரும் ஜப்பானிய தூது கோஷ்டியில் 2 உத்தியோகஸ்தர்கள் பிரதிநிதிகளாகவும், உத்தியோகப் பற்றற்றவர்கள் 10 பேர் யோசனை கூறுகின்றவர்களாகவுமிருப்பார்கள் என்று தெரிகிறது. ஆலோசனை கூறுகின்றவர்கள் பெரிதும் கைத்தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். ஜினீவாவிலுள்ள சர்வதேசச்சங்க பீரோவின் தலைவராக இருந்த ஸவாடா, மஞ்சூரியாப் பிரச்சினை சம்பந்தமாக ஜப்பான் சர்வதேச சங்கத்தை விட்டு வெளியேறிய பிறகு ஜப்பானுக்குத் திரும்பினார். அவர்தான் இந்த தூதுகோஷ்டி தலைவராக இருப்பார். டோக்கியோ வியாபார இலாகாவின் வியாபார பீரோ டைரெக்டரான டெரோ மற்றொரு உத்தியோகப் பிரதிநிதியாக இருப்பார். இவர்கள் தங்களுக்கு ஆலோசனை கூறுகின்றவர்களுடன் செப்டம்பர் மாதத் திறுதியில் இந்தியா வந்து சேருவார்கள். அக்டோபர் மாதத்தில் ராஜிப் பேச்சு ஆரம்பமாகும். ஆலோசனைக் கூறுவதற்காக வரும் ஜப்பானியர் பல கோஷ்டிகளாகப் பிரிந்து மாகாணங்களில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். அவர்கள் இந்தியக் கைத்தொழிற் சாலைக் காரர்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளுவார்கள்.

*　*　*

லண்டனில் ஜுலை 21வ நடந்த போர்டின் கூட்டத்தில் வர்த்தக மந்திரி மிஸ்டர் வால்டர் ரன்ஸிமன் வருங்காலத்தில் நம்பிக்கை தெரிவித்துப் பேசியதாவது:—ஒரு விஷயம் மாத்திரம் நிச்சயம். அதாவது பொருளாதார மந்தத்திலிருந்து உலகம் தலைதூக்க ஆரம்பித்திருக்கிறது. ஜுலை மாதத்தில் வழக்கமாக வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரிப்பது வழக்கம், ஆனால் இவ்வருஷம் ஜனவரி மாதத்திலிருந்து 5-லட்சம் பேருக்கு அதிகமாக வேலை கிடைத்திருக்கிறது. பல தேசங்களுள் நாம் புதிதாக வர்த்தக உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறோம். அர்ஜன்டைனுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி ஒருவகை மாம்சம் 100 லட்சம் பவுனுக்கு அங்கிருந்து வெளிப்போயிருக்கிறது. இன்னும் இரண்டொரு வாரங்களில் பின்லண்டுடன் ஓர் உடன்படிக்கை ஏற்படப் போகிறது. பிறகு லட்வியா, எஸ்தோனியா, லிதுவேனியா தேசங்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ள உத்தேசம். எந்த தேசத்தின் வர்த்தக கைத்தொழில் அபிவிருத்திக்கும் நாம் தடையாயில்லை. உலக மார்க்கட்டுகளுக்கு நம்மாலான துணைபுரியவும் எப்போதும் போல் தயாராயிருப்போம்.

*　*　*

ஒட்டாவா ஒப்பந்தத்தின்படி தங்களுக்கு ஏற்பட்ட அனுகூலங்களைக் கொண்டு பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் விவசாயப்பொருள்களை முக்கியமாக ஓட், வெண்ணெய், பால்கட்டி முதலிய சாமான்களை கிரேட்பிரிட்டனில் கொண்டுவந்து குவித்து வருவதாக லார்டு சபையில் எரல்டிலாவார் அறிவித்தார். இந்த நிலைமை நீடித்தால் பிரிட்டிஷ் மார்க்கட்டுகள் காலக்கிரமத்தில் பயனற்றுப்போய் குடியேற்ற நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் ஒத்துழைப்புக் குறைந்துவிடுமாகையால் ஒட்டாவா ஒப்பந்தத்தின் கருத்தைத் தக்கபடி குடியேற்ற நாடுகள் உணர்ந்து நடந்துகொள்ளவேண்டிய அவசியத்தை அவர் வற்புறுத்தினார்.

*　*　*

பொருளாதார மகா நாட்டின் பணநாணயக் கமிட்டியார் பணநாணயப்பிரச்னைகளைப் பற்றி ஆராய்ந்தனர். உள்நாட்டுப் பழக்கத்திற்கு தங்க நாணயங்கள் தற்கால நிலைமையில் வேண்டியதில்லையென்று பொதுவாக எல்லோரும் ஒப்புக்கொண்டு ஒரு முடிவுக்கு வந்தார்கள். வியாபாரத்தடைகளை நீக்குவதற்காக அமெரிக்கப் பிரதிநிதி கொண்டுவந்த தீர்மானத்தை மிஸ்டர் விட்லினுப் ருஷயாவின் சார்பாக பலமாக ஆதரித்தார்.

*　*　*

விலைவாசிகளைப் பெருக்கவும் வியாபார அபிவிருத்திக்கும். போதியவளவு கடன் வசதிகள் வேண்டுமென்றும், தனிப்பட்டவர்களின் வர்த்தக முயற்சிகளுக்கு ஒழுங்கான முறையில் கவர்ன்மெண்டார் ஆதரவளிக்க வேண்டுமென்றும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க அந்தந்த தேச கவர்ன்மெண்டுகள் தகுந்த வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், அமெரிக்கப் பிரதிநிதி கோஷ்டியால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டிருந்தது.

*　*　*

## தமிழ்நாடு கடை திறப்பு.

திருச்சினுப்பள்ளி பெரிய கடைவீதியிலிருக்கும் 'வர்த்தகஊழியன்' ஆபீசுக்கு எதிர் சாரியில் 28--7—33உ காலை 9-மணிக்கு தமிழ் நாடு கடை திறப்புவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நேஷனல் காலேஜ் பிரின்ஸ்பால் திரு. வே. சாரநாத அய்யங்கார், தலைமையில் திருவாளர்கள் கி. அ. பெ. விஸ்வநாதம், ஹாஜி முகம்மத் திவான் குலாம் தஸ்தகீர் சாஹிப், ஜே. எஸ். நரசிம்மலு நாயுடு. எம். எஸ். ஆர். சந்திரன் முதலியோர் அத்தகைய கடையின் அவசியத்தை வற்புறுத்திப் பேசினர். இறுதியாக அந்த கடையின் மானேஜர் திரு. டி. எஸ். தினகர நாயுடு எல்லோருக்கும் வந்தனங் கூறி சந்தன தாம்பூலம் வழங்கியபின் விழா நிறைவுற்றது.

### "வர்த்தக ஊழியன்" கிடைக்குமிடம்.

ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹிக்கின்பாதம் புஸ்தக சாலைகளிலும், பாளயங்கோட்டை, கோவில்பட்டி, விருதுநகர், காரைக்குடி, கும்பகோணம், வேலூர், பொள்ளாச்சி, ஈரோடு, கரூர் முதலான இடங்களிலிருக்கும் "தமிழ்நாடு" கடைகளிலும் 'வர்த்தக ஊழியன்' கிடைக்கும். மானேஜர்.

## கப்பற் செய்தி.

(Shipping News.)

சென்னை துறைமுகத்தில் ஆகஸ்டு மாதத்தில் எதிர்பார்க்கப்படும் கப்பல்களின் பெயர்களும், தேதிகளும்.

சில்வர்பெல்வி, நாகபுரி 2, தலட்டா 3, கிளான்மக்கே, வின்ட்சர் 4, குஜராத் விட்ச்ன்பெல்சு, அல்பர்ட்டோடிரிவஸ் 6 ராய்வில்லி, எரின்புரா 7, லாகூர் 9, சுமத்ரா, எக்ஸ்புளோராடியூர் கிராண்டிடியர், நூர்மஹால் 10, கிராண்ட், ராஜுலா 11, மஹுட், ஹுக்கர் 12, மண்டாலா 13, மாரின்பெல்சு 17, டர்பன், டுமாஞ, பர்ஞர்டின்டியியர்ரி 20, கோடாரட்ஜா 23, சிட்டி ஆப் யார்க், ரோஹுஞ, மக்பீ 25, கஞரியா 22, மன்ஞர் 26, லாகூர் 29, யூகன்பெல்சு 30 சிட்டி ஆப் பாத் 31.

## அரிசிக்குக் கட்டணக் குறைவு.

தென்னிந்தியாவிலுள்ள தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து கொழும்புக்கு இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு ரயில் கட்டணம் குறைக்கப்பட்டிருந்தது அனைவருக்கும் தெரியும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கே இக்குறைந்த விகிதம் அமுலிலிருக்கும் என்று கூறப்பட்டது. அக்காலவரையறை சமீபத்தில் முடிந்து விட்டதால் கட்டணம் மீண்டும் உயர்த்தப்பட்டு விட்டது. தென்னிந்திய ரயில்வே அதிகாரிகள் கட்டணத்தை இன்னும் அதிகமாகக் குறைக்க விருப்பமுள்ளவர்களா யிருக்கின்றனர். ஆனால் இலங்கை ரயில்வே அதிகாரிகள் அவ்வாறு அதிகம் குறைப்பதை ஆட்சேபிக்கின்றனர். இவ்வித நிலைமையில் இன்னும் மூன்று மாதங்களுக்கு முன் போல் மீண்டும் குறைக்கப்பட்டிருக்கிறது.


தங்கள் வியாபாரத்திற்குள்ள டிரேட் மார்க்குகள், பெயர்கள், லேபில்கள் முதலியவைகளை மற்ற வியாபாரிகள் உபயோகித்து உங்கள் லாபத்தை அடையுமுன் நீங்கள் அவைகளை உடனே

**கல்கத்தா ரிஜிஸ்டர் செய்துகொள்ளவும்.**

விலாசம்;—ஆல் இந்தியா ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்ஸி, ஹீபர் ரோட், பாலக்கரை, திருச்சி.

முழு விபரம் இனும்.

# T. R. RANGASAWMY NAIDU,

**PAINT & GLASS MERCHANT,**

**341 & 342, Big Bazaar Street, TRICHINOPOLY.**

**All sorts of Paints, Varnishes, Colours, Enamels, etc., manufactured by well known firms & British and other make**

Looking glasses, Ceiling glasses, Colour glasses and Ornamental glasses etc.

Raja Ravi Varma pictures, British & German lady pictures, sceneries, Postcard pictures, frames, Tin Plates etc.

Straw boards, Colour papers, Glass beads, Gold & Silver leaves, Copper foils, etc., for ornamenting Pandals.

Can be had at cheap rates.

# ராஜம்—சமூகசீர்திருத்தக் கதை.

(Social Reform Novel.)

(திரு. எம். எஸ். ஆர். சந்திரன் எழுதியது.)

அத்தியாயம் 14.] [ஜூலை மாதத் தொடர்ச்சி.

## ராஜம்(ஸ்வர்ணம்) ஜமீன்தாரினி.

ஸ்வர்ணபுரியின் அரண்மனை தர்பார் ஹால் வெகுநேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பலவகை நிறங்கொண்ட குஷன் (மெத்தை) நாற்காலிகள் வரிசையாகப் போடப்பட்டிருந்தன. தர்பார் மத்தியில் ஒரு மேடைமீது ஸ்வர்ண ஸிம்மாசனம் அரசர் அமர்ந்திருக்க வைக்கப்பட்டிருந்தது. மின்சார விசிறிகள் தொங்கிக்கொண்டிருந்தன. பல்வேறு விசித்திர சித்திரப் பதுமைகள் சுவற்றில் தொங்கவிடப்பட்டும் மூலைகளில் வைக்கப்பட்டுமிருந்தன. அரண்மனை பாண்டு வாத்தியங்கள் சப்தித்துக்கொண்டிருந்தன. அரசர் நடந்து சிம்மாதனத்தருகில்வர வாயிலில் இருந்து மேடைமட்டும் சிகப்புப் பட்டுத்துணி விரிக்கப்பட்டிருந்தது. அன்று வெள்ளிக்கிழமை மாலை தர்பார் கூடும் நேரத்துக்கு அரைமணி முன்னதாகவே சமஸ்தான போலீஸ் படைகள் வந்து தர்பார் ஹாலுக்கு எதிரில் அணிவகுத்து நின்றன. ஸ்வர்ணபுரி நகரப் பிரமுகர்களும் கனதனவான்களும் ஒருவர்பின்னொருவராக வந்து தங்கள் தங்கள் ஆசனத்தமர்ந்தனர். 4-45-மணிக்கு மந்திரி சஞ்சீவி நாயுடுகாருவும், சேனாதிபதி ராஜாசிங் பகதூரும் தத்தம் மோட்டார் வண்டியில்வந்திறங்கினார்கள். அவர்களை சமஸ்தான திவான் பேஷ்கார் வெங்கடப்பய்ய பந்துலுகாரு வரவேற்றார். சேனாதிபதி போலீஸ் படைகளைக் கவனித்தார். தர்பார் விஷயங்கள் சரியாக கவனிக்கப்பட்டிருக்கிறதா வென்று பார்த்தார். மந்திரிக்கு சில பிரமுகர்கள் வந்தனங் கூறிவிட்டு தங்கள் ஆஸனத்தமர்ந்தனர். தர்பாருக்கு ஸ்திரீகள் பலர் விஜயம் செய்திருந்தனர். அவர்களுக்கு ஹாலின் ஒரு பக்கத்தில் இடவசதி கொடுக்கப்பட்டிருந்தது அங்கு குழுமியிருந்த ஸ்திரீ புருஷர்கள் யாவரும் "திருடர்களை நடுக்காட்டில் நள்ளிரவில் கொன்ற உத்தமியைப் பார்க்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டும், "இப்பொழுது மணி என்ன, என் இன்னும் வரவில்லை மணியாகிவிட்டதே" என்றும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்ததால், தர்பாருக்குரிய லட்சணங்களில் ஒன்றாகிய "சப்தம் செய்யாமை" என்பது அங்குகூடியிருந்தோர்களினிடையில் காணமுடியவில்லை. அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்ற அவா மேன்மேலும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

டக், டக், டக், டக், என்ற சப்தம் செவிபட இரு குதிரை வீரர்கள் கையில்நீண்ட ஈட்டிகள் தாங்கி குதிரையின் மீதேறி முன்னேவர அக்குதிரைகளின் பின் ரூ.20,000 மதிப்புள்ள புதியமோட்டார்வந்துநின்றது. மந்திரி சஞ்சீவி வருகிறது மோட்டார் ராஜஆக்கினை ஞாபகத்திலிருக்கட்டும்" என்றுசேனாதிபதிராஜாசிங்கை எச்சரித்தார். ராஜா சிங் ஓடோடியும்வந்து வந்தனங் கூறிவிட்டு மோட்டாரின் கதவைத் திறந்தார். ரோஜா நிறங் கலந்ததும் தங்க ஜரிகைப் பூக்கள் கோர்த்ததும், தங்க ஜரிகை பூக்கோடுகள் கரையிலிடப்பட்டதுமான வெகு அழகான காசிப் பட்டுப்புடவையையும் பனாரீஸ் ரவிக்கையையும் தரித்துக்கொண்டும் தனக்குரிய ஆபரணங்களை அணிந்துகொண்டும், குங்குமப் பொட்டுடனும் மல்லிகை ரோஜா புஷ்பமலர்களை தலையிலணிந்துகொண்டும், விலையுயர்ந்த தங்க கில்ட் பாதரட்சையுடனும் (ஹாப் ஸ்லிப்பர்) மெதுவாகக் கீழே இறங்கினாள். ஒன்றை மட்டும் கையில் தாங்கிவர அவள் மறக்கவே இல்லை. எந்தக் கத்தியால் (இறந்து கிடந்த) கள்ளர் கூட்டத்தை துண்டு துண்டாக வெட்டி மாய்த்தாளோ, அக் கத்தியை பள, பள வென்று பிரகாசிக்கும் உறையில் வைத்து, அதனை தன் இடது கையில் வைத்துக்கொண்டிருந்தாள். மந்திரி சஞ்சீவியும் அருகில் வந்து வந்தனங்கூறி தர்பார் ஹாலுக்குள் அழைத்துச் சென்றார். அன்ன நடையோவென ஐயுறும் வண்ணம் ராஜமும் (ஸ்வர்ணம்) அழகிய புன்சிரிப்புடன் ஹாலுகுள் நடந்து சென்று, ராணி தேவியின் ஆஸனத்தினருகில் போடப்பட்டிருந்த உயர்ந்த குஷன்நாற்காலியில் ஸ்வர்ணம் என்கிற ராஜம் உட்கார்ந்தாள். ஹாலுக்குள்ளிருந்த சகலரும் இவளையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். "தஞ்சாவூர் சீமை யல்லவா, என்ன நாகரீக உடை, என்ன நாகரீக நடை, என்ன நாகரீகப் பார்வை, நல்ல முகவெட்டு; அவளுக்கு என்ன குறைவு" என்று பெண்களுக்குள் தெலுங்கில்சம்பாஷணை நடந்தது. இவ்வளவு அழகுள்ள பெண்ணை நமதரசன் விடமாட்டாரே," என்று ஆண்மக்களிடைய பேச்சு நடந்தது. "ஒரு சமயம் ஏன் இதுவரை சம்பந்தமிருந்திருக்காதென்று நினைக்கிறீர்கள்" என்று வேறு சிலர் பேசிக்கொண்டிருந்தனர். "கழுத்தில் தாலி இருக்கிறதுபோல் தோன்றுகிறதே" என்று மற்றுஞ்சிலர் கவனித்தனர். கள்ளர்களை இவள் ஒருத்தி மட்டும் தன்னந்தனியே நின்று கொன்றிருக்க முடியுமா? அது சாத்தியமானதா? இதை நீர் நம்புகிறீரா" என்று இன்னுஞ் சிலர் சந்தேகக் கேள்விகளைக் கிளப்பினர். "நமக்கென்ன தெரியும். கள்ளர்கள் கொல்லப்பட்டார்கள், அரண்மனை சொத்துக்கள் அகப்பட்டன. இப்பெண்ணொருத்தியே நள்ளிரவில் கொன்றாள் என்று அரசர் தீர்மானித்து விட்டார்." இதையொட்டி இன்றுதர்பாரோ நடக்கிறது" என்று பின்னும் சிலர் உரையாடினர்.

ஸ்வர்ணத்தின் புன்சிரிப்பு நின்று விட்டது. கவலை அதிகரித்துக்கொண்டிருந்தது. "என் புருஷனின் தேக நிலை எவ்வாறாயிற்றென்று அறியமுடியவில்லை. புருஷன் வியாதியாக இருக்கும் நிலைமையில், நான் இவ்விலையுயர்ந்த பட்டுப்பட்டாடைகளையும், வாசனைத்திரவியங்களையும், மலர்களையும் அணிந்துள்ளேனே, ஐயோ, மகாபாவியானேனே என்செய்வேன், என்னைத்தொட்டு தாலி கட்டிய புருஷன்கதி இன்னதென்று தெரியாத நிலைமையில் நான் இங்ஙனம் சர்வாலங்கார பூஷணியாக இருப்பது முற்றிலும் தவறன்றோ. நான் எனது எளிய நிலைமையை தற்போது காட்டக்கூடாத நிலையில் இருக்கிறேனே ஐயோ மேலும் பெரிய கள்ளர் கூட்டமுழுதையும்கொன்ற வீரதீர பெண்மணியென்று யாவரும் என்னை எண்ணியிருக்கின்றனர். இச் சம்பவத்தை முன்னிட்டு இன்று தர்பார் கூட்டியிருப்பதாக மந்திரிமூலம் எனக்கு தெரிந்து நான் இங்கு வந்திருக்கிறேன்.

இதுகாறும். நான் தர்பாரைப் பார்த்ததே இல்லை. இவ்வளவு வைபவம் பொருந்தியதென்று தற்போதுதான் அறிகின்றேன். தர்பாரில் நானும் மிகுந்தஜாக்கிரதையுடன்நடந்துகொள்ளவேண்டும். எதற்கும் தேவி ஸ்ரீ அகிலாண்ட நாயகியும், ஸ்ரீரங்க நாச்சியாரும், ஸ்ரீ மட்டுவார் குழலாம்பிகையும் எனக்கு உற்றதுணை என்று சொல்லி மனதுக்குள் அம்பிகை, பராசக்தியை வேண்டி தியானித்தாள். பின்னர் சுற்று முற்றும் பார்த்தாள். ஹைதராபாத்து பிரதேசத்தில் வேலையிலமர்ந்திருப்பதாக சொல்லப்படும் தன் கணவன் ஒருகால் இக்கூட்டத்திலிருக்கலாகாதா வென்று எண்ணினாள். அப்பெருங்கூட்டத்தில் அமர்ந்துள்ள ஆண்பாலர்களிடையே ஒரே தமிழ் வாசி வீற்றிருக்கக் கண்டாள். அவன் தமிழன் என்றும் மட்டும் தெரிந்ததேயன்றி அவன் இன்னானென்று நிச்சயமாய் தீர்மானிக்க முடியவில்லை. தன் கணவன் ரெங்கனது ஜாடைமட்டும் முகக்குறியில் தோன்ற கண்டாள். அவன் நவீன உடை தரித்திருக்கக் காணப்பட்டான். மேலும் வடநாட்டு முறையில் தலைப்பாகை தரித்துக்கொண்டிருந்தான். அவனைத் தன் புருஷனேவெனச் சற்று சந்தேகித்தாள். ஹைதராபாத்திலிருந்து அவர் இத்தர்பார் வர ஏது காரணமாயிருக்கக்கூடும் என்று யோசிக்கலானாள். தான் நினைக்கின்றபடி அவனே தன் புருஷனாயிருக்கலாகாதா வென்று எண்ணுவாள். எப்படியாவது தன் புருஷனைக் கண்டுகொள்ள வேண்டுமென்று பல தடவையும் எண்ணுவாள். அவனிடமே அவளறியாது அவளது கண்களிரண்டும் சென்றுகொண்டிருந்தன. இவள் அவனைப் பார்க்கும்போது அவன் தலை குனிந்தவண்ணமோ அன்றி வேறு விஷயத்தில் மனம்ஈடுபட்டோ பலவாறு யோசிப்பவன்போல் நடித்தான். சில நிமிஷங்களுக் கெல்லாம் இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்தனர். தன்னறியாமலே இவள் தேகம் வியர்த்தது. உடனே தலை குனிந்துகொண்டாள். அவன் தன் புருஷனாக விருக்கவேண்டுமெனத் தீர்மானித்தாள்.

இந்த நிலையில் அந்த ஆடவனும் பலவாறு சிந்திக்கலானான். "நம்மை ஏன் இப்பெண் அடிக்கடி பார்க்க வேண்டும். இத்தனை பேர்கள் நிரம்பிய இச்சபையில் நம்மை ஏன் பார்க்கவேண்டும். அவளோ இன்னாரென்று நமக்குத் தெரியவில்லை. ஆனால் நம் மனைவி ராஜத்தின் சாயலும் பார்வையும் இவளிடம் இருக்கின்றது. ஆனால் அவள் தானென்று நிச்சயிக்க முடியவில்லை. நாம் உடம்பு காயலாய் இருந்த சமயம் யாரோ நமது மாமனாரை ஏமாற்றி பொய் சொல்லி, பொய்க்கடிதமும் எழுதி ராஜத்தை அழைத்துச் சென்றதாகத் தெரிந்துகொண்டேன். நம்மிடம் அவள் இனி வருவதும் சந்தேகம். அவள் தன்னந்தனியே இப்பிராந்தியங்களுக்கு வரவும் முடியாது. அவ்வளவு புத்திசாலியுமல்ல. மேலும் அரசனுடைய ஆதரவில் இருக்கும் இவளை நாம் அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தால், யாராவது அரசனிடம் கோள் சொல்லிவிட்டால், நம் வாழ்வுக்கு தாழ்வு நேரிடும். இனி அடிக்கடி அவளைப் பார்த்தலும் கூடாது. இருக்கட்டும் (சில விநாடிகள் யோசித்து) ஒரு சமயம் ராஜமாயிருந்தால்—இருந்தால்தான் நாமென்ன செய்யமுடியும்-ஸ்வர்ணபுரி அரசனது ஆதரவில் சிக்கியுள்ள இவளைத் திரும்ப நாம் எவ்வாறு அடைதற்கூடும். அவள் ராஜமும் அல்ல. அவள் நம் மனைவியு மல்ல" என்று தனக்குள்ளே தீர்மானித்து அவளை அடிக்கடி பார்ப்பதை நிறுத்திவிட்டு வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டான். இம்மாதிரி இவன் செய்தது ஸ்வர்ணமென்கின்ற ராஜத்துக்கு கவலையை அதிகரித்துவிட்டது. ஐயோ இந்த விலையுயர்ந்த ஆடைகளைத் தரித்துக்கொண்டதாலும் அரண்மனையின் ஆதரவில் தற்போது நிற்பதாலும் அவர் எனது கற்பைச் சந்தேகிக்கின்றார் போலும்! என் செய்வேன், ஈசா! பரா சக்தி உமையே! இந்த நிலையில் நான் செய்யக்கூடியதென்ன? அம்பிகே உன்னையே நான் நம்பினேன். அருள்புரிவாய், என்று மனதில் ஜகதீஸ்வரியை துதிசெய்துகொண்டிருந்தாள்.

* * *

பூம், பூம் என்று வாத்யங்கள் முழங்கின; டபீர், டபீர் என்று அதிர்வெடிகள் முழங்கின; மரியாதை குண்டுகள் டப், டப் என்று போடப்பட்டன; நானாவித வாத்திய கோஷங்கள் செவிடுபடக் கேட்டன; முன்னும், பின்னும் குதிரை வீரர்கள் சூழ நான்கு குதிரைகள் பூட்டிய தங்கக் கோச்சு வண்டி தர்பார் ஹால் முன்வந்து நின்றது. மந்திரி சஞ்சீவியும், சேனாதிபதி ராஜா சிங்கும் இருபக்கத்துக் கதவுகளையும் திறந்தனர். சர்வாலங்கார பூஷிதையாய், சர்வாபரணதாரிணியாய், சர்வ பரிமள புஷ்ப கந்தாதி வாசனைகள் அணிந்தவளாய், பொற்கிரீடம் தரித்தவளாய், ஸ்திரீகளுக்குரிய சர்வ லட்சணங்களும் கொண்டவளாய், ஸ்வர்ண காந்தினி தன் கணவன் ஸ்வர்ண கேசரியுடன் வண்டியை விட்டிறங்கினாள். மந்திரி சஞ்சீவி ராணியை அழைத்துக்கொண்டு ஸிம்மாதனத்தருகில் சென்றதும் ராணியும் ஸிம்மாதனத்தின்மீது ஒருபக்கமாக உட்கார்ந்தாள். இதுகாறும் ஸ்வர்ணத்தை ராணிபாய் பார்க்காததால் ஸ்வர்ணத்தைப்பார்க்க அவாக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள். மேடையின் அருகில் கவலை கொண்டவள்போல் ஏதேதையோ எண்ணி ஏக்கமுற்றவள்போல் குஷன் நாற்காலியில் உட்கார்ந்திருந்த ஸ்வர்ணத்தைக் கண்ணுற்றாள். அவளது கையில் தொங்கிக்கொண்டிருந்த கத்தி உறையை ராணிதேவி கவனித்தாள். ஆனால் ராணியை ஸ்வர்ணம் பார்க்கவில்லை. வெளியில் அரசன் சேனாதிபதியுடன் அணிவகுத்து நின்ற போலீஸ் படைகளைப் பார்த்துவந்தான். அரசனுக்கு படைகள் வந்தனங்கூறியது. பின்னர் அரசன் தர்பார் ஹாலுக்குள் நுழைந்தான். யாவரும் எழுந்து நின்றனர். ஸ்வர்ணமும் எழுந்து நின்றாள். எழுந்திருக்கும்போது கத்தி உறை நாற்காலியின்மீது பட்டு சத்தம் உண்டாக்கியது. யாவரும் அதைக் கவனித்தனர். அரசரும் கடைக்கண்ணால் அவளைப் பார்த்துவிட்டு கத்தியையும், தன்னுடன் கொண்டுவந்திருக்கிறாளே,


வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

திருநெல்வேலி ஞா. ப. சதானந்தம் அம்மாள் எழுதிய

**சுந்தர காந்தம்** என்னும் இனிய தமிழ் நவீனப் வெளிவந்து விட்டது!!!

உண்மைக் காதலின் உயர்வை விளக்கிக் கண்முன் நடப்பதுபோன்று விஷயங்களைக் காட்டிச்செல்லும் இக்கதை, களைத்த மனத்தையும் களிக்கச் செய்யும். பல அறிஞரின் மதிப்புரையைப் பெற்றது. 384 பக்கம், டெம்மி அளவு அழகிய கிளேஸ் கடிதம், அழுத்தமான கட்டடம்கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூ. 1—8—0. தபாற் செலவு வேறு. வேண்டுவோர் இதனடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

ஞா. ப. சதானந்தம் அம்மாள் C/o காட்டிலாகா ரேஞ்சு ஆபீசர்,
கிருஷ்ணகிரி. சேலம் ஜில்லா.

நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டே சிம்மாதனத்தில் ஸ்வர்ண காந்தியின் அருகில் உட்கார்ந்தார். வெண்சாமரங்கள் இருபக்கமும் போடப் பட்டன. நாட்டியப்பெண்கள் நாட்டிய மாடினார்கள். கட்டியக்காரர்கள் கட்டியம் கூறினார்கள். யாவும் தெலுங்கில் நடந்ததால் நம் கதாநாயகி ராஜத்துக்கு (ஸ்வர்ணத்துக்கு) ஒன்றும் விளங்க வில்லை. பின்னர் தர்பார் கூட்டியதின் காரணத்தை மந்திரி சஞ்சீவி தெலுங்கில் எடுத்துச்சொன்னார். தன் பெயரைக் குறிப்பிட்டுச்சொன்னதால் தன்னைப்பற்றித்தான் பேசுகிறார் என்று ராஜம் தெரிந்துகொண்டாள். பின்னர், அரசன் ஸ்வர்ண கேசரி தெலுங்கில் பின்வருமாறு அறிவித்தார்.

“ஸ்ரீமதி ராஜம் அவர்களே! சபையோர்களே! இன்று இங்கு கூடியிருக்கும் தர்பார் இதுவரை கூட்டப்பட்ட தர்பாருள் மிகச் சிறந்ததும், ஒப்பிலா உயர்வும் பெற்றதாகும். நம்முடைய தேசத்தின் பெரும்பாகம் காடுகள் நிரம்பியுள்ளதென்பது நீங்கள் அறிந்ததொன்றாகும். நம்முடைய தேச காவற்படைகளையும் ஏமாற்றி அவர்களையும் வென்று தேசத்தைப் பலவகையாலும் சூறையடித்து வந்த கள்ளர் கூட்டங்கள் மிகுதியும் நிரம்பிய நம் தேசத்தில், சோழ தேசத்திலிருந்து ஒரு பெண்மணி ஸ்ரீமதி ராஜம் என்ற நாமத்துடன் விஜயம் செய்து நள்ளிரவென்றும், நடுக்காடென்றும் பாராமல், பிறர் உதவி சிறிதுமின்றி தன்னந்தனியாய் நின்று நூற்றுக்கணக்கான கள்ளர்கூட்டங்களை துண்டு துண்டாய் கொன்று (கரகோஷம்) நம் தேசத்துக்குப் பயத்தைப் போக்கி நற்பதவியளித்த உத்தமியைப் இன்று நாம் பஹிரங்கமாக வரவேற்கிறோம் (கரகோஷம்). தைரிய லட்சுமி போன்ற இப்பெண்ணரசியைப்போல நம் தேசத்தில் பலர் உதிக்க வேண்டுமென்பதே நமது கோரிக்கை. இந்த அம்மாளது சக்தியால் நம்நாட்டு திருட்டு சொத்துக்களும், திருட்டுப்போன அரண்மனை சொத்துக்களும் திரும்ப நாம் கிடைக்கப் பெற்றோம் (கரகோஷம்) இதுவே நமது நாட்டு வைபவங்களில் முக்கியமானதாகும்.

நிற்க, ஸ்ரீமதி ராஜம்மாளது அரிய பெரிய செய்கையை மெச்சியும், இவ் விசேஷ சம்பவத்தை யொட்டியும், அம்மாள் என்றென்றும் வமிச பரம்பரையில் ஆண்டு அனுபவிக்கக்கூடியதாக நம் தேசத்தின் ஒருசிறு பாகமாகியதும், 100 கிராமங்கள் உள்ளதுமான ரெங்கனதபுர ஜமீனை யாதொரு கப்பமும்வரியும் இன்றி சர்வமானியமாக இன்று முதல் அனுபவிக்க சகல தேவதைகள் சாட்சியாக அம்மாளுக்கு தானம் செய்துள்ளேன் கரகோஷம் (கரகோஷம்). அந்த 100 கிராமங்களில் வசிக்கும் குடிகள் ஸ்ரீமதி ராஜம்மாளையே தங்கள் ராணியாகக்கொண்டு அம்மை சொற்படி கேட்டு இனி நடக்க வேண்டியது. அம்மாள் நம் ராஜ்யத்தில் ஒரு சிற்றரசியாக இருக்க ஏற்பாடு செய்துள்ளோம். (கரகோஷம்) ஸ்ரீமதி ராஜம்மாள் அவர்களே! (ஆங்கிலத்தில்) இனி இந்த பாரத்தை நீங்கள் ஏற்று குடிகளைப் பிரியமாக நடத்துவீர்களாக. தங்கள் குழந்தைகளாக குடிகளை பாவித்து குடிகளின் கஷ்ட நஷ்டங்களை நன்கு மனதிற்கொண்டு உங்கள் ஜமீனை நிர்வகிக்க இன்று உங்களுக்கு இந்தக் கேடயத்தையும் செங்கோலையும், வாளையும், சன்னத்தையும், பகிரங்கமாக அளிக்கின்றேன். (கரகோஷம்.)

இந்த ஜமீனை ஏற்று இனி நீங்களே நிர்வாகம் செய்து வருவீராக. ஜமீன் சம்மந்தப்பட்ட வரையில் இதன் மூலம் சர்வசுதந்திரமும் அளித்திருக்கிறேன். இப்பிரதேசங்களிலுள்ள கள்ளர் கூட்டங்களை ஒழித்த பெண்ரத்தினமே! தாங்கள் என்றென்றும் சுகமே வாழ்ந்து செங்கோல் செலுத்தி தீர்க்காயுளையும்திடகாத்திரத்தையும் பெற்று வாழ எல்லாம்வல்ல இறைவனைவேண்டுகின்றோம்” என்று சொல்லி சன்னத்தையும் ஏனைய சின்னங்களையும் அரசர் வழங்கினார்.

